8 - 6 - 89

கும்பாபிஷேக மலர்

குளியாப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய கோவில்

புனராவர்த்தன பிரதிஸ்டா கும்பாபிஷேக

மண்டல பூர்த்தி — மலர் வெளியீடு 22 - 7 - 89

කුලියාපිටිය

ශ්‍රී සිව සුබ්‍රමනිය ස්වාමි

කෝවිලේ කොත් පැලඳවීමේ හා විවෘතකිරීමේ මහා උත්සව සංග්‍රහය

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்த புராணம்

உற்பத்திக் காண்டம்

காப்பு

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

ஸ்ரீசுப்ரம்மண்ய ஸ்ரீசக்கரம்
(ஸ்ரீசரவணபவ யந்திரம்)



சுப்ரம்மண்ய காயத்ரி

தத்புருஷாய வித்மஹே
மஹா ஸேனாய தீமஹி
தன்ன ஷண்முக ப்ரச்சோதயாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சூரியாப்பிட்டி அருள்மிகு
ஸ்ரீ சிவசுப்ரமண்ய சுவாமி கோவில்
மகா கும்பாபிஷேகம்

முகூர்த்தம்-

சுக்கில வருடம் வைகாசி மாதம் 26ம் நாள்

8-6-89

வியாழன் காலை 7-27 முதல் 8-20 வரையுள்ள
கன்னி லக்ன சுபவேளை

கும்பாபிஷேக மகா சிவாச்சாரியார்-
''பிரதிஷ்டா வித்தகர் சிவாகம ஞான சாகரம்''
சிவஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்கள்

கோவில் குருக்கள்-
சிவஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள்

சிற்ப நிர்மாணம்-
திரு. S. P. ராமசாமி ஆசாரி, உக்குவெல

ஆலய நிர்வாகம்-

தலைவர்
திரு. இ. பாலசிங்கம்

உப தலைவர்கள்
Dr. சிவா இரவீந்திரா
திரு. இ. தீர்க்கநாதன்

செயலாளர்
திரு T. V. வெள்ளைச்சாமி

பொருளாளர்
திரு. க. பாலசண்முகம்

செயற் குழு: K. கமலேஸ்வரன், A. கலைநேசன், ரவீந்திரன், சாமி அய்யா, M. ஜெயராஜா, M. ராஜமணி, B. நந்தகுமார், ஆழ்வார்பிள்ளை, செல்வராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணார்பண்ணை கிளை நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்

வள்ளி தெய்வானை சமேதரராய் ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய, கலாச்சார அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர்

மாண்புமிகு பி. தேவராஜ்

அவர்களின்

ஆசியுரை

வடமேல் மாகாணத்திலுள்ள இந்தக் கோவில் மகா கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்வது எனக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் தருகிறது. கடந்த பத்து ஆண்டுகளாக முயற்சிசெய்து ஒத்திப்போடப்பட்ட இக் கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாகவும் மிகவும் உற்சாகம் சூழ்ந்த நிலையிலும் நடைபெறுவதைப் பார்க்கும்போது என் உள்ளம் பூரிக்கின்றது. குளியாப்பிட்டி பகுதியிலே இந்துக்கள் மிகவும் குறைந்த தொகையினராகவே உள்ளனர். எனினும் அவர்கள் ஆழ்ந்த சமயப் பற்றுடனும் பண்பாட்டு உணர்வுடனும் கந்தப் பெருமானுக்குரிய இந்த ஆலயத்தை வெகு சிறப்பாக அமைத்து மிகவும் நியாயமான முறையிலே கோவிலை நடாத்தி வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இங்குள்ள பௌத்த மக்களும் மற்றவர்களும் இந்த ஆலயத்தின் வழிபாடுகளில் கலந்து கொள்கின்றார்கள் என்பது நன்கு தெரிகின்றது. அது மட்டுமல்ல இங்குள்ள சில சிங்கள பிரமுகர்கள் இக்கோவிலுக்கு உதவிசெய்து உறுதுணையாக இருக்கின்றார்கள் என்று அறியும்போது, இத்தகைய சூழ்நிலையிலுள்ள ஏனையோரையும் குளியாப்பிட்டி நகருக்கு வரச்செய்து இங்குள்ள சூழ்நிலையை அறிந்துகொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் மதத்தைப் பின்பற்றும் அதே வேளையில் நமது பாரம்பரிய கலை பண்பாட்டைப் பேணி நடக்கவேண்டியது அவசியமாகும். சமூக ரீதியிலான பல்வேறு சேவைகள் ஆலயத்தை மையமாகக் கொண்டு செயல்படவேண்டும். என்பதற்காக எங்களுடைய அமைச்சிலே சில கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து அதன் மூலம் நமது சமயம் பண்பாட்டை பேணி வளர்க்க வேண்டும் என நான் தீர்மானித்துள்ளேன். இத்தகைய கருத்தரங்குகளிலே அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென்பது என் அவாவாகும்.

நன்றி

பி. தேவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளியாப்பிட்டி இந்து மகா சங்கத் தலைவர்

திரு. இ. பாலசிங்கம்

அவர்களின்

ஆசியுரை

குளியாப்பிட்டி இந்து சமயத்தவர்கட்கு ஆலயம் இல்லாத குறைதீர எம்பெருமான் அருளால், இங்கு வசித்த சைவ சமயத்தவர்கள் ஒன்று கூடி சங்கம் அமைத்து. அதற்கு இந்து மகா சங்கம் என நாமமிட்டு, எனது தகப்பனார் சிவபதமடைந்த திரு. சிதம்பரநாதர் இராமலிங்கம் அவர்களை சங்கத்தின் முதல் தலைவராகக் கொண்டு ஆலயம் அமைக்க பள்ளப்பிட்டியில் 1949ம் வருடம் காணி வாங்கி, ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமிக்கு ஆலயம் அமைத்து எமது வழிபாட்டிற்கு வழி வகுத்தமைக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

எமது ஆலயத்திற்கு பல சிங்கள அன்பர்கள் நன்கொடை அளித்து, இலங்கையில் நடந்த பல கலவரங்களிலும் கோவிலுக்கு ஒரு இன்னலும் வராது காப்பாற்றி கோவில் விடயமாக நடந்த எல்லாக் கருமங்களிலும் முன்நின்று எங்களுக்குச் செய்த உதவிகளுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

எங்கள் கோவில் பல ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தானம் செய்யப்பட்டு பரிவர்த்தன புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் பூர்த்தி அடைய பல தடைகள் வந்து வந்து, இம்முறை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி அருளாலும் எமது சங்க அங்கத்தவர்களின் விடாமுயற்சியாலும், பௌத்த மத அன்பர்களின் ஒத்துழைப்பாலும், கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிறைவுபெற்று மண்டலாபிஷேகம் நடைபெற்று சுவாமி எல்லாம் பக்தர்களுக்கும் அருள் புரிவதைக் காண நான் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

முருகன் சாதி, மத பேதமின்றி குளியாப்பிட்டி நகர வாசிகட்கும், மற்றும் எல்லோருக்கும் அருள் புரிய வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். இம் மலரைப் பிரசுரிக்க நிதியளித்த Dr. திருநாதன், Dr. ஜெயராசா ஆகியோருக்கும், தொகுப்பாசியர் Dr. சிவா இரவீந்திரா அவர்களுக்கும் என் சார்பிலும் இந்து மகா சங்கத்தின் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சுபம்

ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமி வர்ழ்க
வள்ளி தெய்வானை வாழ்க
குளியாப்பிட்டி நகரமக்கள் குறைதீர்க்கும்
குமரப் பெருமான் வாழ்க வாழ்க.

இங்ஙனம்,

இ. பாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'නමෝ'

'ශිව පිහිටයි'

උපකාර ස්තුතිය

"ශිව ශුබ්‍රමණියම් ස්වාමි කෝවිල"
පල්ලපිටිය,
කුලියාපිටිය.

කුලියාපිටිය හින්දු බැතිමතුන්ට තම ආගමික පුද පූජාවල් කරගැනීමට දේවාලයක් නොතිබුනි. එය මහත් අඩු පාඩුවකි. එම අඩුව සපුරාලීම සඳහා පරලෝයැපත් සිදම්බරනාදන් රාමලිංගම් නැමති මගේ පියාගේ ප්‍රධානත්වයෙන් හින්දු මහා සංගමය නමින් සංගමයක් ආරම්භ කරන්නට යෙදුනි. එම සංගමය මගින් 1949 දී කුලියාපිටියට යාබද පල්ලපිටිය නම් ගමෙන් ඉඩමක් මිළයට ගන්නට යෙදුනි. එහි ශ්‍රී සිවශුබ්‍රමණිය ස්වාමින් උදෙසා දේවාලයක් ආරම්භ කරන්නට යෙදුනි. මේ මහෝපකාරය කිරීමට පුරෝගාමීවූ එතුමන්ලාට අපි බෙහෙවින් කෘතඥ වෙමු.

අපේ දේවාලයට විවිධ පරිත්‍යාගයන් කල කලබලකාරි අවස්ථාවලදී කවර අන්දමේ අලාබහානියක් හෝ නොවෙන අයුරින් දේවාලය ආරක්ෂා කල දේවාලයේ සිදුකල සෑම ආගමික මෙහෙයකදීම ඉදිරියෙන් සිට විවිධ උපකාර කළ සිංහල සහෝදර සහෝදරියන්ටද ස්තුති කරමි.

අවුරුදු කිපයකට පෙර අපේ දේවාලයේ ප්‍රතිසංස්කරණය කල අවස්ථාවේදීද අපේ දේවාලයේ මහා කුම්භාභිෂේකය, මණ්ඩලාභිෂේකය වැනි විවිධ අවස්ථාවලදී පැමිණ විවිධ පරිවර්තන සහ පුණරුත්ථාපනයන්හිදී උදව්කල විවිධ ආගමික සියළු බැතිමතුන්ටම සිවශුබ්‍රමණියම් දෙවියන්ගේ කරුණාවෙන් සෙතක්ම වේවායි පතමු.

කුලියාපිටිය නගර වැසියන්ගේ අන් හැමදෙනාටත් ජාති ආගම් බේදයෙන් තොරව සිවශුබ්‍රමනියම් දෙවියන්වහන්සේ කරුණා කෙරෙත්වායි පතමු.

මේ කළඹ පහසුවෙන් මුද්‍රණය කරගත හැකි අයුරින් ධන පරිත්‍යාගයන් කල වෛද්‍ය විශේෂඥ කේ. තිරුනාදන් සහ දොස්තර ජයරාජ් යන මහත්වරුන්ටත් මුද්‍රණය සඳහා වෙහෙස නොබලා ක්‍රියාකල දොස්තර ඊ. රවීන්ද්‍රන් මහත්මාටත් මා වෙනුවෙනුත් සමිතියේ අනෙකුත් සාමාජිකයන් වෙනුවෙනුත් ස්තුති කරමි.

ශ්‍රී සිවශුබ්‍රමණියම් දෙවිඳු දිනේවා
වල්ලි දේවාණි මව් තුමියන් දිනේවා
කුලියාපිටියවාසි හැමදෙනා රැකගෙන
කුමාර පෙරුමාන් දෙවිඳු දිනේවා

මෙ වගට

ඉ. බාලසිංහම්
(සභාපති)
හින්දු මහා සංගමය
කුලියාපිටිය.

21 - 7 - 89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா கும்பாபிஷேகத்தை நடாத்திய பிரதம சிவாச்சாரியார்

சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள்

அவர்களின்

ஆசியுரை

கலியுக வரதனும் முருகப் பெருமான் எழுந்தருளி இருக்கும் இடமெல்லாம் தெய்வீகமும் கருணையும் நிறைந்து விளங்கும் அப் பெருமான் வீற்றிருந்தருளும் அறுபடை வீடுகள் தமிழ் நாட்டில் உண்டு எமது ஈழவள நாட்டிலும் கருணையோடு அவன் வீற்றிருக்கும் கோவில்கள் கதிர்காமம், நல்லூர், செல்வச் சந்நிதி உட்பட பல உண்டு. மலை நாட்டில் குறிஞ்சிக் குமரனைக் கோவில் கொண்ட ஆலயங்கள் அளவில அதேபோன்று குளியாப்பிட்டி நகரில் தொன்று தொட்டு சிவசுப்பிரமணியப் பெருமான் வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் ஆலயம் சிறப்போடு அமைந்திருக்கிறது. அப்பெருமானை சாதி, மத பேதமின்றி வந்து வழிபடும் பக்தர்கள் தொகையோ அளவில. அப்பெருமானுக்கு அவன் திருவருள் கொண்டு ஆலய நிர்வாகஸ்தர்களும், ஆலயக் குருக்கள் ஐயா அவர்களும், அடியவர்களும் அப்பெருமானின் திருப்பணியைச் சிரமேற் கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியில் பல அடியவர்கள் வாரி வழங்கிய தர்மப் பொருளைக் கொண்டு திருப்பணியை நிறைவேற்றி சென்ற வைகாசி மாதம் 26ம் திகதி (8-6-89) வியாழக்கிழமை மகா கும்பாபிஷேகத்தையும் 45 நாள் மண்டலாபிஷேகத்தையும் சிறப்புற நிறைவேற்றியுள்ளார்கள். அக்கும்பாபிஷேகக் காட்சியை குளியாப்பிட்டி வாசிகளும் தரிசித்துப் பேறு பெற்றார்கள் கோவில் குருக்கள் ஆலய நிர்வாகத்தவர்கள் ஆகியோரின் அழைப்பின் பேரில் அடியேனும் வந்து அப்பெருமானின் கும்பாபிஷேகத்தை நடாத்தும் பாக்கியம் கிடைத்தது. ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் திருப்பெருங் கருணை அந்த நாட்டு மக்கள் ஆலய நிர்வாகஸ்தர்கள், ஆலய அர்ச்சகர் அனைவருக்கும் கிடைத்தது. நல்வாழ்வு வாழவேண்டும், நாடு சிறக்க வேண்டும் என வாழ்த்துவதோடு, எம் பெருமானின் பல சிறப்பு அம்சங்கள் கொண்ட இக் கும்பாபிஷேக மலர் முருகனின் பாத கமலங்களில் அர்ச்சனை மலராக விளங்கி எல்லோருக்கும் அவன் திருவருட் பிரசாதமாக பலன் கொடுக்கவேண்டுமென்று ஆசி வழங்கி அமைகின்றேன்.

வணக்கம்

இங்ஙனம்

கி. சோமசுந்தரக் குருக்கள்

மட்டுவில்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா நகர சபை
யாழ்ப்பாணம்

පූජ්‍ය මහාචාර්‍ය කබලෑවේ පියභාරති නායක ස්වාමීන්වහන්සේ ගේ පණිවුඩය

කැලියාපිටිය කතරගම හින්දු කෝවිලේ කුම්භාභිෂේක පූජාව නිමිත්තෙන් ප්‍රකාශයට පත් කෙරෙන අනුස්මරණ කලාපය සඳහා පණිවුඩයක් නිකුත් කරන්නට ලැබීම ගැන මම අතිශයින්ම සතුටු වෙමි.

බෞද්ධ, කතෝලික, ඉස්ලාම්, හින්දු ආගම්වලට අයත් සිංහල, ද්‍රවිඩ, මුස්ලිම් ආදී විවිධ ජාතීන් සමගිව වෙසෙන ප්‍රදේශයකි කැලියාපිටිය. මෙහි ජාති ආගම් අරගල කවදත් නැත. කෘෂිකර්මය, වෙළඳාම වැනි දැහැමි ජීවිකා වෘත්තීන්ගෙන් යැපෙන මෙහි වැසියෝ සාමකාමීහුය. සිංහල, බෞද්ධ කටයුතු සඳහා සෙසු ආගමිකයන්ගේ හා ජාතීන්ගේ සහාය ලැබෙන අතර සෙසු ආගමික හා ජාතික කටයුතු සඳහා සිංහල බෞද්ධයන්ගේ නොමඳ සහාය ද ලැබේ. මෑත කාලයෙහි කපිලවස්තු පුර ශ්‍රී සර්වඥ ධාතූන් වහන්සේ කැලියාපිටිය නගරයෙහි අප අස්සැද්දුම විහාරස්ථානයට වැඩම වූ අවස්ථාවෙහි කතෝලික දේවස්ථානයෙහි ගරු පූජකතුමා ඇතුළු කන්‍යා සොහොයුරියන්ගේ ද නොමඳ සහාය ලැබිණ. 1989 වෙසක් පුර පසළොස්වක පොහොය දින අප විහාරස්ථානයෙහි මල් දන්සැලක් පැවැත්වූයේ කතෝලික දේවස්ථානයෙහි තරුණ පිරිසයි. ශ්‍රී ලංකා රාමඤ්ඤ මහා නිකාය පිහිටුවා වදාළ අති පූජ්‍ය අඹගහවත්තේ ඉන්ද්‍රසභවර ඤාණසාමි මහානායක මාහිමියන්ගේ අපවත් වීමෙන් සියවසක් පිරීම නිමිත්තෙන් කැලි/ප්‍රාදේශීය සංඝ සභාවේ මෙහෙයීමෙන් 1986 වර්ෂයේ පැවැති ගුණානුස්මරණ මහා උත්සවයට හින්දු, කතෝලික, ඉස්ලාම් පූජකවරු ද සහභාගි වූහ. කතෝලික දේවස්ථානයේ මෙන්ම හින්දු කෝවිලේ ද ආගමික උත්සව අවස්ථාවල දී බෞද්ධ භික්ෂූන්වහන්සේ ද සහභාගි වෙති.

විශේෂයෙන් දණ්ඩගමුව සුධර්මාරාම පුරාණ විහාරාධිවාසී පූජ්‍ය මගුලාගම උපතිස්ස ස්ථවිර, කතෝලික දේවස්ථානයෙහි ප්‍රධාන න ගරු මයිකල් එසේතා පූජකතුමා, හින්දු කෝවිලේ ප්‍රධාන වයි. ආර්. බාලචන්ද්‍ර ශර්මා පූජකතුමා පාඨශාලා පරීක්ෂක සෙයිනුල් ආබ්දීන් මැතිතුමා කැලි/මධ්‍ය මහා විද්‍යාලයාධිපති ශාස්ත්‍රාචාර්ය ප්‍රේමචන්ද්‍ර දිසානායක මහත්මා හා මා ද සහභාගීව පවත්වාගෙන ආ සර්වාගමික සාරධර්ම සුරැකීමේ සමුළුව මගින් මේ රටේ සාමය, සමගිය හා සදාචාරය වර්ධනය කොට ආගමික මූලධර්ම හැඳිනීම හා ආධ්‍යාත්මික ගුණ වගාව තුළින් දෙමව්පියන්ට හා වැඩිහිටියන්ට සැලකීම ඇතුළු යහගුණ වැඩි දියුණු කිරීම පිළිබඳව ඉටුකළ සේවය අතිවිශාලය. කැලි/සර්වෝදය මධ්‍යස්ථානය ඇතුළු ප්‍රදේශයේ විදුහල් රාශියකම මේ පිළිබඳව පැවැති රැස්වීම් හා සම්මන්ත්‍රණවලදී එහි අගය වඩාත් පැහැදිලි විය. ජාතික ආගමික සමගිය තුළින් දේශයේ දියුණුවට කළ හැකි සේවය අප්‍රමාණය. ඒ සඳහා කැලියාපිටිය, හින්දු කෝවිලේ ප්‍රධාන වයි. ආර්. බාලචන්ද්‍ර ශර්මා පූජක තුමාගෙන් ද මෙතෙක් සිදුවී ඇති මහ මෙහෙය අතිශයින්ම අගය කරන අපි එම කෝවිලේ දියුණුව ගැන අපේ ප්‍රසාදය මෙයින් ප්‍රකාශ කරමු.

දේශයටත් ජනතාවටත් සෞභාග්‍යය උදාවේවා.

මෛත්‍රී වගට,

කබලෑවේ පියභාරති මහා ස්ථවිර

2533
—— ජූලි 01 දින
1989

ශ්‍රී ශාසනාලංකාර මහා විහාරයේදීය.
කැලියාපිටිය, අස්සැද්දුම

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කුලියාපිටිය ශ්‍රී කතරගම දේවාලයේ කොත් පැළඳවීමේ හා විවෘත කිරීමේ මහා උත්සවය

නිමිත්තෙන් අප කතෝලික සභාවටත් සහභාගී වීමට අවස්ථාවක් ලැබීම ගැනද ශ්‍රී කතරගම දේවාලයේ පූජක තුමාට ස්තූති කරමි.

අප රට තුළ අනාගතය ගොඩ නගන්න සිටින තරුණ තරුණියන් පැහැදිලි ආලෝකයක් දැකීම ආශාවෙන් ඉදිරියට යාමේදී වැඩිහිටි සමාජය පැහැදිලි දර්ශනයක් අවධාරණයෙන්ම දිය යුතු වුවත් අද පවතින පොදු සමාජය ජීවන දර්ශණයක් ගැන දක්වන අතර මං වුන භාවය මහත් කණගාටුදායක කාරණයකි. මෙවන් වකවානුවක දහම මුල්කරගෙන ඉහත දේවාලයේ පූජකතුමා සෑම ආගමකම සහභාගීත්වය මැද තම සිද්ධස්ථානයේ විවෘත කිරීමේ උත්සවය පැවැත්වීම මිනිස් අපි කවුරුත් අගය කරන සහෝදරත්වය විදහා පාන්නකි. මිනිසා ජය කනුව කරා යන්නේ එකිනෙකා අනිකාව තේරුම් ගෙන අනිකාගේ පැතුම් ගරු කර එකිනෙකාව පිළිගන්නා තරමටය. ඒ වෙනුවට අද අපට දකින්න ලැබෙන්නේ ධනයෙන් බලයෙන් හා තන්හාවෙන් පිරුණු සමාජයක් මගින් එකිනෙකාව සුනු විසුණු කිරීමකි. අනාගත අපේ වස්තුව වන දරු කැලට යම්දායාදයක් අපි හිමිකර දිය යුතු වී නම් එය මිනිසාට මිනිසා වෘකයකු වීමක් නොවේ, එකිනෙකාට කමා කිරීමෙනුත් එකිනෙකා පිළිගැනීමෙනුත් ජනිත කල හැකි ආදරයේ බලයයි.

මේ අරමුණ ඔස්සේ සෑම දහමකම නායකත්වය, අනාගත දරු කැලට මග පෙන්වීමට අවධාරණයෙන්ම පෙරමුණ ගෙන ඉදිරිපත් විය යුතු කාල පරිච්ඡේදයක අප දැන් සිටින බව තේරුම් ගත යුත්තෙමු. අද මේ සිද්ධස්ථානයේ ඉත සිතින් අරඹන සේවාව දිනෙන් දින ආදරයේ බලය නැමැති සැබෑ ජීවනය මල්ඵල ගැන්වෙන හෝ නැන්පත් වේවා යන්න මගේ ඉත සිතින් කරන පැතුමයි.

මෙයට,
ගරු හැරල් ප්‍රනාන්දු පියතුමා

කුලියාපිටිය ශාන්ත ජෝශප් රෝ. ක. දේවස්ථානයේ
මීසම් පාලක පියතුමා

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளியாப்பிட்டிய

ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி

அவர்களின்

ஆசியுரை

அன்புடையீர், அஸ்ஸலாம் அலைக்கும்

மனித சமுதாயத்தை நன்னெறிப்படுத்தவே சமயங்கள் தோன்றின. பௌத்தம், கிறிஸ்து, இந்து, இஸ்லாம் இந்நான்கு மதங்களும் நம் நாட்டி மக்களுக்கு நன்னெறியின் பால் அறைகூவல் விடுத்துக் கொண்டிருக்கின்றன. சமயங்கள் புரியும் அரும் பணியின் மகத்துவத்தை உணராதார் அவற்றை ஒன்றுக்கொன்று முரண்படுத்தி வேற்றுமைகளை வளர்க்க முற்படுவது உணரப்பட்டது. இது நாளடைவில் பாரதூரமான தீய விளைவுகளுக்கு வழிகோலக் கூடும் என அஞ்சப்பட்டதையடுத்து சர்வ சமய ஒத்துழைப்பு ஒன்றியம் நம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு சமயத்தாரிடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் சமயங்கள் மீது பிற சமயத்தார் கொண்டிருந்த தப்பெண்ணங்களைப் போக்கவும் இது வழிகோலியது என்பது நான் கைகண்ட உண்மையாகும்,

மேற்படி ஒன்றியத்தின் மூலம் குளியாப்பிட்டிய ஸ்ரீ சுப்பிரமணிய கோயில் அர்ச்சகரான ஸ்ரீ பாலச்சந்திர சர்மா சுவாமிகள் இத்துறையில் ஆற்றிய சேவை மகத்தானது. இக் கோயிலால் வெளியிடப்படும் இக் கும்பாபிஷேக மலர் மக்கள் உள்ளங்களில் நல்லெண்ணங்களை விதைத்து ஐக்கியமும் நற்பண்புகளும் மேலோங்கச் செய்ய வேண்டுமென ஆசீர் வதிக்கின்றேன்.

ஏ. எல். செய்னுல் ஆப்தீன்
ஓய்வுபெற்ற வ. க. அ (தமிழ்)
குளியாப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කුලියාපිටිය ශ්‍රී කතරගම දේවස්ථානය භාර පූජකතුමාගේ සුභාශිංශනය

මෙම සඟරාවට පණිවුඩයක් නිකුත් කරන්නේ ඉමහත් සතුටිනි. ප්‍රදේශයේ බැතිමතුන්ගේ එකමුතුකමින් ගොඩනැගුණ මෙම දේවස්ථානය ඉකුත් දින කොත් පැලැන්දවීමෙන් විවෘත කරන ලදී. මෙම භාරදූර කර්තව්‍ය නිමකිරීමට ප්‍රදේශයේ බැතිමතුන්ගෙන් ලැබුන සහයෝගය මා ඉතා අගය කොට සලකන්නෙමු.

කුලියාපිටිය ප්‍රදේශයේ හින්දු පූජකතුමා වශයෙන් මමත් රෝමානු කතෝලික දේවස්ථානයේ පූජකතුමාත් ඇස්වැද්දුමේ විහාරාධිපති ස්වාමින් වහන්සේත් මුස්ලිම් පල්ලියේ පූජකතුමාත් මධ්‍ය මහා විද්‍යාලයේ විදුහල්පති තුමාත් එක්ව, අප ප්‍රදේශයේ ජාති සහ ආගම් අතර එකමුතුකම ගොඩනැගීම සඳහාත් සෑම ග්‍රාමයකටම ගොස් රැස්වීම් සාකච්ඡා පවත්වා ජාතීන් අතර ආගම සම්බන්ධයෙන් මනා අවබෝධයක් ලබාදී ඇත්තෙමු.

තවද ආගමික දේවස්ථානයක් කියන්නේ ආගමික හරය පැහැදිලි කරන දැහැමි ජීවිතයක අගය තහවුරු කරන අධ්‍යාත්මික ජීවිතය පෝෂණය කරන ස්ථානයක් විය යුතුය. තම ජීවිතයට අවශ්‍ය අධ්‍යාත්මික ජීව ශක්තියත් ආගමික පසුබිමත් සිද්ධස්ථාන තුලින් ලබා ගැනීමෙන් තමන් ජීවත්වන සමාජයේ ආලෝකමත්ව බැබලිය හැක. සමාජයේ මිනිසුන් අතර වැඩ කිරීමේදී ඇතිවන ගැටළු සහ අභියෝග ශීලාචාරව නිරාකරණය කර ගැනීමට අවශ්‍ය ධෛර්යයත් මග පෙන්වීමත් ආගම තුලින් ලබාගත හැක. මෙයින් මා හට පැහැදිලිව කිවහැක්කේ ආගම රැඳී තිබෙන්නේ දේවස්ථාන තුල නොව මනුෂ්‍ය හදවත් තුලය.

බොහෝ දෙනෙක් අද ආගම දේවස්ථානවලට පමණක් සීමාකර සහෝදර කම පවා නොහඳුනන දූෂිත ක්‍රියාවල යෙදෙන අතර දේවස්ථාන පවා ඔවුන් සලකන්නේ සාමාන්‍ය ගොඩනැගිලි ආකාරයටයි. එහෙත් වඩා ඵලදායි වන්නේ ආගම දේවස්ථානයට පමණක් සීමා නොකර දවසේ පැය24 තුලම ඔබේ සමාජයේ ඔබ ජීවිතය තුල ආගම ජීවත් කරවන දරුවෙක්, දැරියෙක් තරුණයෝ හා තරුණියක් මවක් සහ පියෙක් වීමයි.

තරුණ පරපුර ගැන විශේෂයෙන් කථා කරන මෙවන් කාලයක ආගමානුකූලව ජීවත් වීමට සිතට ගතයුතුය. තවද මා දේවස්ථානය භාර පූජකතුමා වශයෙන් ප්‍රදේශයේ ඔබ සැමගෙන් බලාපොරොත්තු වන්නේ මෙතෙක් මෙම ප්‍රදේශයේ සැමදෙනාම එකම පවුලක් හැටියට ගොඩනැගූ ආගමික සහ ජාතික එකමුතුකම මෙම දේවස්ථානය තුලින් දිනෙන් දින වැඩිවී එය ඔබේ පවුල තුල ගම තුල සහ රට තුල පෝෂණයවීම දැකීමයි. එසේම මෙම ප්‍රදේශයේ ජීවත්වන සෑම පුර වැසියෙක්ම අනාගත ජීවිත සෞභාග්‍ය මත් එකක් වීම මගේ එකම හැගුමයි.

මා හද බැඳි විශේෂ ස්තූතිය.

- ★ මෙම දේවස්ථානය විවෘත කිරීම නිමිත්තෙන් පවත්වනු ලැබූ විශේෂ පූජාවන් භාරගෙන කටයුතු කල සියළු බැතිමතුන්ටත්
- ★ පැමිණ සිටි පූජක තුමන්ලාට නිවාස පහසුකම් ලබාදුන් අයි. ඒ. එම්. බුහාරි මහතාටත්
- ★ සියලුම කටයුතු භාරව වැඩ කල හින්දු මහා සංගමයට හා හින්දු තරුණ සංගමයට.
- ★ විවෘත කිරීම දිනයේදී නොයෙක් වැඩ කටයුතු මැද්දේ මාගේ විශේෂ ආරාධනය පිලිගෙන පැමිණි කතෝලික පියතුමාටත්
- ★ මෙම විවෘත කිරීමේ උත්සවය නිම කිරීමට සියලුම ආකාරයේ උදව් උපකාර කල බැතිමතුන්ට මා හද බැඳි විශේෂ ස්තූතිය පුදකරමි.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்மதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

திங்கள் மும்மாரி பெய்யும் செந்திலம்பதியில் வாழும்
சங்கரன் தவத்தால் வந்த சண்முகன் அருளிஞலே

அன்புடையீர்,

தமிழ்தென்றலாய் திகழும் தென் திசை
நாட்டிலே பாட்டாளியாய்
பிறந்து, பண்புச் சீலர்களாய் மலர்ந்து,
திரைக்கடலோடியும் திரவியம் தேடு

என்ற ஔவையின் வாக்கிற்கிணங்க இயற்கை வளம் நிறைந்த இலங்கை மாநகரில் வணிகத் துறையிலே கலங்கரை விளக்காய் இருந்த குளியாப்பிட்டியில் குடியமர்ந்து தொழில் செய்துவந்த எமது முன்னேர்களும் இந்நாட்டில் இவ்வூரிலே வாழ்ந்த உடன் பிறப்புகளும், ஒன்றிணைந்து அமைக்கப்பட்ட ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம், இப்பகுதி மக்களின் இதயக் கோயிலாக விளங்குகிறது.

இதன் சிறப்பு பற்றி அறிஞர்களும், அமைச்சர்களும், அடியார்களும் அழகாக சிறப்புரை வழங்கியுள்ளார்கள். மேலும் கும்பாபிஷேக மண்டலாபிஷேக விழாவிற்கு வருகைதந்து உதவிசெய்த அன்பர்கள் அனைவருக்கும், குறிப்பாக கும்பாபிஷேக விழாவை சிறப்பாக நடத்த மனமுவந்து பெரும் பணம் வழங்கிய கருணைக் கடலாம் காத்தமுத்து கமலேஸ்வரன் அவர்களுக்கும் எமது இந்து மகா சங்கத்தின் சார்பாக இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நாட்டு மக்கள் அனைவரும் நலமுடன் இணைந்து வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நன்றி, வணக்கம்

E. T. நாதன்
(உப தலைவர்)
இந்து மகா சங்கம்,
குளியாப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளியாப்பிட்டி

இந்து இளைஞர் மன்றத்தின்

ஆசியுரை

இந்து மதம் மிகப் பழமையானது, சாசுவதமானது, ஜாதி மத இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. சமூகத்திலுள்ள அனைவரின் முன்னேற்றத்தையும் அடிப்படையாக கொண்டது. இதை சைவ, வைணவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவர்களின் ஆழமுள்ள கருத்துச் செறிவுள்ள தத்துவங்களை விளக்குகின்ற தேனினும் இனிய தமிழ் பாக்களால் நாடெங்கினும் பரப்பி வந்திருக்கின்றார்கள். இம் மதத்திற்கு ஸ்தாபகர் என்று ஒருவர் இல்லாதிருப்பதை நாம் அறியலாம். இதில் மற்றொரு விசேஷம் என்னவென்றால் நம் பண்பாட்டின் கட்டுப்பாட்டின் முறையாக நம் ஆசார அனுஸ்டானங்களை பல ஆயிர ஆண்டுகளுக்கு முன் இருந்ததுப் போலவே இன்றும் நம் மக்கள் கடைப் பிடித்து வருகிறார்கள். கலாச்சாரத்தில் இது போன்ற நிலைமை வேறு எங்கும் காணமுடியாது.

திருக்கோயில்கள் அமைப்பது இறைவனை வழிபடுவதற்கு மட்டுமல்ல இந்து மதம், தமிழ், தமிழ் கலாச்சாரம், நல் ஒழுக்கம், பக்தி, இவை அனைத்தும் ஒருங்கே வளர்ச்சி அடையச் செய்வது திருக்கோயில் காரணம் என்றால் அது மிகையாகாது. நான் என்ற அகங்காரம், ஆணவம், பேராசை, பொறாமை முதலியவற்றை ஒழித்து சாந்தி, சமாதானம், சகோதர சமத்துவம் முதலியவற்றை எமது மனங்களில் தோன்றச் செய்யுமிடமும் திருக்கோயிலாகும். இப்படியான கோயில்கள் அமைப்பது அதற்குரிய தித்திய கருமங்களை நிறைவேற்றினால் அதை செய்பவரின் ஏழு பிறவிகளின் செய்த பாவம் நீங்கப் பெற்று பிறவித் துன்பம் நீங்கி சிவத்துடன் கலந்துவிடுவான் என்று வேதங்கள் கூறுகின்றது.

பல்லாண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்களால் ஒரு சிறிய கட்டடத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்து மகா சங்கம் பல சிரமங்களிடையே இக் கோயிலை ஐந்து பிரகாரங்களோடு பெரிய கோயிலாக மாற்றி அமைத்தது எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய, பெருமைபடக்கூடிய விஷயமாகும். இன மத பாகுப்பாடின்றி நகர மக்கள் இதற்கு பொருள் உதவி அளித்துள்ளனர். அதற்கு மேலாக இக் கோயில் பிரதம குருக்கள் பிரம்ஸ்ரீ வை. ஆர். பாலசந்திர சர்மா அவர்கள் இத் திருப்பணியை முடிக்க இரவு பகல் பர்ராது தனது ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளித்துஇக் கோயிலுக்குப் புது பொலிவு ஏற்பட காரணமாக இருந்தார்.

கடந்த **4-6-1989** சுபமூர்த்தத்தில் தொடங்கிய நவ குண்ட யாக பூஜையோடு கும்பாபிஷேகம் **8-6-1989** இனிதே முடிவடைந்தது. இதை இந்து மகா சங்கம் முன்னிற்க ஆலய பிரதமகுரு பிரமஸ்ரீ வை. ஆர். பாலச்சந்திர சர்மா அவர்களின் பொறுப்போடு, ''பிரதிஷ்டா வித்தகர், சிவாகம ஞான சாகரம்'' சிவஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்கள் அவர்களின் தலைமையின் கீழ் கற்றறிந்த சிவாச்சாரியார்கள் உதவியுடன் இக் கும்பாபிஷேகம் நடந்தேறியது. இவ் விழாவிற்கு இந்து கலாச்சார அமைச்சர். திரு. தேவராஜ் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள், எமது இந்து இளைஞர் மன்ற அங்கத்தவர்கள் இதற்கு தம் பணியை சிறப்பாக செய்து முடித்தார்கள். மேலும் எமது இளைஞர் மன்றம் சமயத்தொண்டு, பொதுத் தொண்டு, சமய வளர்ச்சி தமிழ் கலாச்சாரத்தை பேணி காத்தல் மற்றும் கோவில் வளர்ச்சி இவைகளுக்கு உறு துணையாக நிற்க திட சங்கர்ப்பம் பூண்டுள்ளது. இது இக் கோவிலின் வளர்ச்சிக்கு ஒரு தூண்டு கோலாக அமைந்துள்ளது. எம்பெருமானின் கைங்கரியங்கள் செவ்வனே செயல் பட்டு வடமேல் மாகாணத்தில் ஒரு தலை சிறந்த தலமாக விளங்க அவன் அருளை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு,

இந்து இளைஞர் மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல வரலாறு

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் அமைந்திருக்கும் குளியாப்பிட்டி இயற்கையின் எழிலும் தென்னஞ் சோலைகளும், நெல் வயல்களும் அழகுற விளங்கும் ஒரு அழகிய நகரமாகும். இங்கு பௌத்த மக்களும், கிறீஸ்தவ மக்களும், முஸ்லீம் மக்களும் சைவ மக்களும் ஒருங்கே தொன்று தொட்டு இணைந்து வாழ்கின்றார்கள். சைவ பெருமக்கள் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஔவையின் முதுமொழிக்கிணங்க தாம் வழிபடுவதற்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற பேரவாவுடன் 1949ல் ஆண்டு மார்கழி மாதம் 15ம் திகதி எம் நகரின் பள்ளப்பிட்டிய பிரதேசத்தில் சுமார் 1 ஏக்கர் அளவுடைய தற்போதுள்ள திருக்கோயில் காணியை விலை கொடுத்து வாங்கினர். அன்றைய இந்து மகா சங்கத்தில் திரு. சி. இராமலிங்கம் அவர்களை தலைவராகக் கொண்டு அங்கம் வகித்த திருவாளர்கள் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி, பெரியசாமி நாடார், சின்னய்யா தங்கமூர்த்தி நாடார், கா. காத்தமுத்து சேர்வை, V. S. பொன்னையா, சு. ஆறுமுகம், S R. S நாராயண நாடார், முருகேசு, தாமோதரம் பிள்ளை ஆகிய முருகனடியார்களே இப்புனித பூமியை உறுதுணையாக இருந்தார்கள்.

நாளடைவில் திருக்கோவில் அமைக்கும் திருப்பணி குளியாப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட தமிழடியார்களும் இங்கு வந்து உத்தியோகங்களில் ஈடுபட்ட பிறவூர் பெருமக்களும் தம்மாலான பேருதவிகளைச் செய்து பல இன்னல்களுக்கும் மத்தியில் முருகப் பெருமானுக்கு ஏக தளத்துடன் கூடிய கருப்பகிரகம், அர்த்தமண்டபம், தரிசன மண்டபம், அமைந்த திருக்கோயில் ஒன்றை கட்டி எழுப்பினார்கள். கருப்ப கிரகத்தில் முருகனின் வேலும், இடது பக்கமாக விநாயகர் பெருமானும் வலது பக்கமாக பைரவ பெருமானுக்குச் சூழமும் மயிலுடன் கூடிய பலி பீடமும் அமைந்திருந்தது. கோவிலின் இடது பக்கம் தீர்த்தக் கிணறு ஒன்றும் வலது பக்கம் அன்றாட நித்திய கருமங்களை குறைவற பணியாற்ற அர்ச்சகருக்கு மனையும் அத்துடன் சேர்த்து ஒரு கிணறும் அமைத்தார்கள்.

அதன்பின் கோயில் ஸ்தாபன கும்பாபிஷேகம் சோபகிருது வருடம் ஆனி மாதம் 14ந் திகதி வெள்ளிக்கிழமை (28-6-63) பகல் உத்திர நட்சத்திரத்துடன் கூடிய பூர்வபட்ச சப்தமி திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய பகல் 11 மணி - 12 மணிக்கிடையில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கும் விக்னேஸ்வரர், மயூரம், பலி பீடம், விமானம் பரிவாரமூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் யாழ் வண்ணை நகர் ஸ்ரீ வெங்கடேச வரதராசப் பெருமாள் தேவஸ்தான பிரதம குரு சிவ ஸ்ரீ அ. இராமசாமிக் குருக்கள் அவர்கள் தலைமையில் நவாலி அட்டக்கிரிக் கந்தச் சுவாமி கோயில் சிவ ஸ்ரீ சண்முகரத்தினக் குருக்களின் உதவியுடன் சிறப்புற செய்தார்கள். ஸ்தபதியாக யாழ். அராலி தெற்கு விசுவ பிரம்மஸ்ரீ சி. மா. விசுவலிங்கம் அவர்கள் இருந்தார்கள். அன்று முதல் நித்திய பூசைகளை கோயில் குருக்கள் பிரம்மஸ்ரீ இ. சண்முக சர்மா அவர்கள் சைவநெறி பிறளாது நடாத்தி வந்தார்கள்.

அன்றைய இந்து மகா சங்கத்தின் தலைவராக திரு. டாக்டர் நா. பரராசசிங்கம் அவர்களும் உப தலைவராக திரு. சு. வேலாயுதம் அவாகளும் செயலாளராக திரு. V. சிவசுப்பிரமணியம் அவர்களும் துணைச் செயலாளராக திரு. இ. தவலிங்கம் அவர்களும் பொருளாளராக திரு. இ. பாலசிங்கம் அவர்களும் துணைப் பொருளாளராக திரு. கா. காத்தமுத்து அவர்களும் நிருவாக சபையில் திருவாளர்கள் பொ. இராமையா, பே. ஆண்டியப்பன் துரைசிங்கம், சிவசேகரம், ஐயாதுரை, சோமசுந்தரம், விஜயதேவன், ஆறுமுகம், அண்ணாமலை, கனகசபை, விக்னராஜா, இ. தீ. நாதன் ஆகியோரும் கணக்குப் பரிசோதர்களாக திரு. சண்முகம், திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் அங்கம் வகித்தார்கள்.

தென்னிந்திய பாகனேரி திரு. கு. பா. அருணாசலம் செட்டியார் அவர்களுக்கு சொந்தமான குளியாப்பிட்டிய D.C.&OILமில் மேற்பார்வையாளரான திரு. கிருஷ்ணன் செட்டியார் அவர்கள் திருக்கோயிலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிய ரூபா 5000-00 த்தில் 20 - 8 - 64 முதல் இன்று வரை அவர்களது பெயரில் பகல் பூசை நடைபெற்று வருகின்றது. வருடம் தோறும் ஆனியுத்திர திருநாள் உபயம் காலஞ்சென்ற குளியாப்பிட்டிய பாராளுமன்ற உறுப்பினரும், கல்விச் சேவைகள் புனருத்தாரன அமைச்சருமான திரு. லயனல் ஜயதிலக குடும்பத்தினரால் நடாத்தப்பட்டு வருகிறது.

மேலும் சைவ பெருமக்கள் தைபொங்கல் திருநாள், தைபூசத் திருநாள் மாசிமகத் திருநாள் சிவராத்திரி திருநாள், பங்குனி உத்தர திருநாள், புதுவருடத் திருநாள், வைகாசி விசாகத் திருநாள், ஆடிப்பெருக்குத் திருநாள், ஆடிப்பூரம், நவராத்திரி திருநாள் கந்த சஷ்டி திருநாள், மார்கழி திருவெம்பாவை ஆகிய உற்சவங்கள் சைவ பெருமக்களால் பொறுப்பேற்று உபயங்களாக நடாத்தப்பட்டு வருகின்றது.

1973ம் ஆண்டு பிரம்மஸ்ரீ சண்முக சர்மா அவர்கள் கோவிலிருந்து விலகிச் சென்றதும் பிரம்மஸ்ரீ பாலசந்திர சர்மா அவர்கள் அர்ச்சகராக இன்று வரை கடமையாற்றி வருகிறார்கள் திருக்கோயிலை புனருத்தாரன கருமங்களை செய்வது கருதி திருப்பணி வேலைகளை ஆரம்பிக்க உறுதி பூண்ட இந்து மகா சங்கம் 14-9-74 இல் திரு முருகப் பெருமானுக்கு பாலஸ்தானம் செய்து முகூர்த்த நாள் பார்த்து 12 - 2 - 75 இல் மூலஸ்தானத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள் அதன்பின்பு திருமாலுக்கும் ஒரு கோயில் எழுப்ப எண்ணி 10-12-82ம் திகதியன்று மீண்டும் பாலஸ்தானம் செய்யப்பட்டது அப்பொழுது திரு. இ. பாலசிங்கம் அவர்கள் தலைவராகவும் திரு. T. வெள்ளச்சாமி அவர்கள் செயலாளராராகவும் திரு கணபதி அவர்கள் தனாதிகாரியாகவும் செயற்குழுவில் திருவாளர்கள் இ தீ. நாதன் கா. குமார் ராஜா, S P. சாமியய்யா ஆ.கலைநேசன் நா தில்லையம்பலம் S. பெருமாள் K.C தாமோதிரம் பா நந்தகுமார் ஆகியோர் அங்கம் வகித்தனர் அன்று ஆரம்பமான திருக்கோயில் இரு தளத்துடன் கொண்ட ஸ்தூபி விமானம். கருப்பகிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம் சபாமண்டபம் எல்லாம் கிரிகை நெறிகளுக்கமைய ஸ்தாபிக்கப்பட்டது. அன்று ஆரம்பிக்கப்பட்ட திருப்பணி வேலைகளை பல்வேறு சிரமங்களுக்கும் பொருளாதாரச் சிக்கல்களுக்குமிடையிலும் சிறிது சிறிதாக தேங்கியிருந்த வேலைகளை நாளடைவில் மனம் தளராத இன்றைய நிருவாகம் முடித்து கும்பாபிஷேக ஏற்பாடுகளை ஆரம்பித்தார்கள் இப் புனித திருப்பணிக்கு ஸ்தபதியாக இருந்த உக்குவளை S:P இராமசாமி ஆசாரி அவர்கள் ஆலயத்திருப்பணியை செய்து முடித்துள்ளார்கள்.

எமது ஆலயம் முருகனின் திருவேலை மூல மூர்த்தியாகக் கொண்டு விளங்கியதை மாற்றி மூலமூர்த்தியாக ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமிக்கும் வள்ளி தெய்வானை அம்மையார்களுக்கும் கற்சிலைகள் வடித்தும் விநாயகர் தண்டாயுதபாணி சுவாமிகளுக்கும் புதிதாக கற்சிலை வடிக்கப்பட்டன தரிசன மண்டபத்தில் காளி அம்பாள் அகங்கார சொரூபியாக அரக்கனை சங்காரம் செய்யும் காட்சியையும் காணக் கூடியதாகவுள்ளது. திருப்பாற் கடலில் ஐந்து தலை நாகத்தில் துயில் கொள்ளும் திருமாலாக காட்சி தருகிறார். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா விஷ்ணு கோயில் கோபுரத்தில் பகவானின் தசாவதார அஸ்த வஷணங்களை சிலைகளாக வடித்து அலங்காரமாகக் காண்கின்றோம் அவையாவன மத்ஸ்சியாவதாரம் கூர்மாவதாரம், வராகவதாரம், நரசிம்மாவதாரம், வாமன அவதாரம், பரசுராம அவதாரம், ராமாவதாரம், பலராமவதாரம், கிருஷ்ணாவதாரம், கல்கி அவதாரம்,ஆகியனவாகும் கோயில் சபாமண்டபத்தின் மேற் சுவர்களை அலங்கரிக்கும் திருமுகப்பெருமான் குறவள்ளியை மணம்புரிய தானாடிய ''திருவிளையாடல்'' காட்சியினை சிலை ரூபமாக காண்கின்றோம். அக்காட்சியுடன் சைவம் வளர்த்த நான்கு குரவர்களான ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் எமக்கு அழகிய சிலைவடிவில் காட்சி தருகிறார்கள் அத்துடன் ஆறுமுகப் பெருமானுக வள்ளிதெய்வானையோடு மயில்வாகனத்தில் வீற்றிருக்கும் காட்சியும் கண் கொள்ளா காட்சியாக விளங்குகின்றன.

இவ்வண்ணம் குளியாப்பிட்டி ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய பெருமானுக்கும் விநாயகர், மகாவிஷ்ணு, ஸ்ரீ துர்க்கையம்பாள்,பைரவர் ஆகிய பரிவாரமூர்த்திகட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்கில வருடம் வைகாசிமாதம் 26ம் நாள் (8-6-89) வியாழக்கிழமை காலை 7.27 முதல் 8.22 மணி வரையுள்ள மிதுன லக்கின சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று திருவருள் பாலித்துள்ளார்கள் இம் மஹா கும்பாபிஷேகம் சர்வபோதகாசாரியர்களாக பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்களும், சிவஸ்ரீ கா. இரத்தின கைலாச நாதக் குருக்களும் ஆசி வழங்க, பிரதிஷ்டா பிரதமக் குருவாக "பிரதிஷ்டா வித்தகர் சிவாகமஞான சர்கரம்" சிவஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்கள் (மட்டுவில்) அவர்களின் தலைமையுடன் சிவாச்சாரியார்களின் வேத, யாக, ஹோம அபிஷேகங்களுடன் நன்கு நடைபெற்றது. இம் மஹா கும்பாபிஷேக பெரும் பணிக்கு திரு கா. காத்தமுத்து கமலேஸ்வரன் அவர்கள் அளித்த பெரும் பொருளுதவி இங்கு குறிப்பிடத்தக்கதுடன் கும்பாபிஷேக உபயமும், நவகுண்ட யாகமும், அன்னாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் திரு. இ. பாலசிங்கம் அவர்கள் விக்னேஸ்வரர் யாகமும், சட்டத்தரணி திரு. குணதிலக அவர்கள் தண்டாயுதபாணி யாகமும், சட்டத்தரணி திரு. ஜபசேகர அவர்கள் பைரவர் யாகமும், திரு. N. நாச்சியப்பன் குடும்பத்தினர் மகாவிஷ்ணு யாகமும், திரு. L. அனில் ஜயதிலக குடும்பத்தினர் ஸ்தூபி யாகமும், முறையே ஏற்று நடாத்தினார்கள்.

இப் பெரும் மஹா கும்பாபிஷேக திருப்பணி வேலைகளில் அரும் பாடுபட்டும் பணியாற்றியும் உழைத்த இந்து மகா சங்கத்தின் தலைவரான திரு. இ. பாலசிங்கம் அவர்களும், உப தலைவர்களாக திரு டாக்டர் சிவா ரவீந்திரா அவர்களும், திரு. இ. தீ. நாதன் அவர்களும் செயலாளராக திரு. வெள்ளச்சாமி அவர்களும், பொருளாளராக திரு. க. பாலஷண்முகம் அவர்களும் நிருவாக சபையில் திருவாளர்கள் கலைநேசன், கா. கமலேஸ்வரன், பா. நந்தகுமார், ரவீந்திரன், சாமியய்யா, ஆள்வார்பிள்ளை, M. ஜெயராஜா, செல்வராஜா, S. ராசமணி ஆகியோர் இத்திருப்பணிக்கு அரும் சேவையாற்றி இருக்கிறார்கள். மேலும் இப்புனித திருபபணிக்காக பேருழைப்பயருளிய எமது ஆலயப்பிரதம குரு பிரம்மஸ்ரீ பாலச்சந்திர சர்மா அவர்கள் ஆற்றிய பெரும் பணிக்கு எமது இந்து மகா சங்கமும் முருகனது மெய்யடியார்களும் என்றும் கடமைப்பட்டவர்ளாவர்.

மாண்புமிகு இந்து கலாச்சார அமைச்சர் திரு செ. ராசதுரை அவர்கள் குளியாப்பிட்டிய பாராளுமன்ற உறுப்பினரும் கல்விச் சேவைகள் புனருத்தாரன அமைச்சர் காலம் சென்ற திரு. லயனல் ஜயதிலக அவர்களின் அனுசரணையுடன் இந்து மகா சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கோயில் திருப்பணிக்கு 10-9-86 இல் ரூபாய் 25,000 வழங்கினார்கள், அதற்கு நாம் என்றும் நன்றியுள்ளவர்களாவோம்.

கும்பாபிஷேக பணியைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் 45 நாட்களுக்கு நடத்தப் படுகின்றது. எம் முருகப் பெருமானை எல்லா மக்களும் குறிப்பாக பெரும்பான்மை சமூகத்தினர் "கத்தரகம தெய்யோ" என்று முகமன் கூறி முருகப் பெருமானை வழிபடுவதன் நோக்கமோ, அன்றைய இந்து மகா சங்கம் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமிக்கு திருக்கோயில் அமைத்து மூல விக்கிரகமாக முருகப் பெருமனை பிரதிஷ்டை செய்தார்கள். எமது ஆலயத் திருப்பணியும் நமது ஆலயமும், சைவ மக்களை மட்டுமன்றி குளியாப்பிட்டி வாழ் அனைவருக்கும் அருள் தந்து மேன்மேலும் எம் மக்களின் ஒற்றுமை என்றும் நிலைக்கவும், அவன் திருவருள் கிடைக்கவும் நாம் பணியாற்றி வழிபடுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එවකට ආර්. බාලසිංහම් මහතාගේ සභාපතිත්වයෙන් අලුත් දායක සභාවක් පිහිටුවන්නට යෙදුනි. එතැන් සිට ඇරඹු දේවාල ප්‍රතිසංස්කරණ කටයුතු නොනවත්වා කර ගෙන යන්නට හැකිවිය. නොයෙක් බාධක ඇති වුවද හින්දු මහා සංගමය ඉමහත් උනන්දුවෙන් තම කටයුතු කරගෙන යන ලදී. අලුත් දේවාලයේ කොත පෙරට වඩා කලාත්මකව පැරණි පුරාවෘත්ත ඇසුරෙන් නිම කරන්නට යෙදුනි.

ගර්භගෘහය, අර්ථ මණ්ඩපය, මහා මණ්ඩපය හා දර්ශණ මණ්ඩපය සහිතව දේවාලය අලුත් වැඩියාව උකුවෙල ඇස්. පී. රාමසාමි කලා ශිල්පියා විසින් කරන්නට යෙදුනි. දර්ශණ මණ්ඩපයේ දකුණු දෙසින් ශ්‍රී කාලි මාතාවට වෙනමම ආසනයක් තනා ඇත. උතුරු පැත්තෙන් සැතපෙන ශ්‍රී විෂ්ණු දේව ප්‍රතිමාව තනා ඇත. මෙහි කොත් කැරුල්ලෙහි විෂ්ණු දෙවියන්ගේ දශ අවතාරය තනා ඇත. මෙහි සභා මණ්ඩපය වටා කතරගම දෙවියන් වල්ලිමාතාව සරණපාවා ගැනීම පිලිම මගින් නිරූපණය කර ඇත. එපමණක් නොව කතරගම දෙවියන් මුහුණු සයක් අත් දොළොසක් ඇතිව මයුරාසනට මැද වැඩ සිටින විලාශය ඉතා සිත් ගන්නා ලෙස ඉදිකර තිබේ. මේවාට අමතරව සිව ආගම දේශනා කල සාන්තුවරු සතර දෙනා වහන්සේලාගේ ප්‍රතිමා ද තෙලා ඇත.

මෙම දේව සභාවට රන්කොත් පැලඳවීමේ මහා මංගල්‍යය පසුගිය වර්ෂ 1989. 6. 8 දින ඉතා උත්කර්ෂවත් අන්දමින් පවත්වන ලදී. එහිදී මූලිකව කටයුතු කලේ මට්ටුවිල්කන්ද සාමි කෝවිල භාර ප්‍රධාන පූජක ස්වාමි ඊ සෝමසුන්දර කුරුක්කල් තුමාය. උත්සව කටයුතුවලදී අනුශාසනය පැවැත්වූයේ මුන්නේශ්වරම් පූජකස්වාමි කා. රත්තින කෛලාසනාද කුරුක්කල් විසිනි. තවත් පූජකවරුන් විසින් වේද මන්ත්‍ර පරායනය කරන්නට යෙදුන අතර යාග හෝම අභිෂේක පූජාද නිසි සාකාරව පවත්වන ලදී.

මෙම මහොත්සවයට නන් අයුරින් ආධාර උපකාර කල පින්වතුන් නම් කිරීම අපගේ යුතුකමක් ලෙස සැලකෙයි. මෙම රන්කොත් පැලඳවීමේ ප්‍රධාන යාග පූජාව කතරගම දෙවියන් වෙනුවෙන් පැවැත්වූවකි. එය කිරීමට භාරගත්තේ කැලියාපිටියේ ව්‍යාපාර කටයුතු කරන කාන්තමූර්ත්තු කමලේශ්වරන් මහතාය. ගනදෙවි යාග පූජාව ආර්. බාලසිංහම් මහතා භාරගත්තේය. අනෙකුත් යාග පූජා භාර ගත් එස්. සුරේෂ් මහතා, නීතිඥ ජේ. ඇම්. ගුණතිලක මහතා, නීතිඥ කේ. ජයසේකර මහතා, එන්. නාච්චිඅප්පන් මහතා, අනිල් ජයතිලක මහතා, එල්. පී. බාලසූරිය මහතා සහ ජයන්ති හෝටලය අයිතිකරු යන අයට අපි කෘතඥපූර්වක වෙමු. මෙම මහෝත්සවය පැවැත්වීමට පුරෝගාමීව කටයුතු කල හින්දු මහා සංගමයේ සභාපති ආර්. බාලසිංහම් මහතාටද උප සභාපති දොස්තර එස්. රවීන්ද්‍රන් මහතාටද ඊ. ටී. නාදන් මයා, ලේකම් ටී. සෙල්ලසාමි මයා, භාණ්ඩාගාරික කේ. බාලෂන්මුගම් මයා ඇතුලු කලයිනේසන්, කේ. කමලේෂ්වරන්, බී. කන්දකුමාර, රවීන්ද්‍රන්, ස්වාමිඅයියා, ආල්වාර්පිල්ලෙයි, එම්. ජයරාජන් සෙල්වරාජ් සහ රාජමනි යන අයද මෙම කාර්තව්‍යය කිරීමෙහිලා බොහෝ වෙහෙස මහන්සියෙන් කටයුතු කළ සමිතියේ සාමාජිකයෝය.

එලෙසම මෙම පිංකමෙහි වැඩි උනන්දුවක් දැක්වූ දේවාලයේ ප්‍රධාන පූජක බ්‍රහ්ම ශ්‍රී බාලචන්ද්‍ර සර්මාට හින්දු මහා සංගමයද දායක පින්වතුන්ද තම ගෞරවය දක්වා සිටිති. තවද මෙම දේවාලයේ පුනරුත්ථාපන කටයුතු නිම කිරීමට ආධාර මුදලක් පරිත්‍යාග කල හින්දු කටයුතු පිළිබඳ එවකට අමාත්‍ය එස්. රාජදුරෙයි මහතාට ද එම මුදල ලබාදුන් අපගේ පරලෝ සැපත් පාර්ලිමේන්තු මන්ත්‍රී ලයනල් ජයතිලක මහතාට ද අපි ස්තූති වන්ත වෙමු. රුහුණු පුරවරයට අධිපති කතාරගම දෙවියන් වෙනුවෙන් කැපවූ මේ දේවාලය අදටත් බහුතර ජනතාව කතරගම දෙවියන්ගේ නිවහන ලෙස සලකමින් දින පතා මෙහි එක් රොක් වෙති. පුද පූජා සත්කාර කරති. දාන ධර්ම කටයුතු කරති. මෙම කෝවිල ශ්‍රී සිවසුබ්‍රමණිය ස්වාමි නමින් නම් කර ඇත. එහි දොර ඇර තිබෙන්නේ එකම මවකගේ දරු කැල මෙන් එන බැතිමතුන්ට පුද සත්කාර කිරීමට බව වෙසසින් සඳහන් කරන්නේ මහත් භක්ති ප්‍රණාමයෙන් යුක්තවය.

(බී. නන්ද කුමාර් මහතාගේ සිංහල පරිවර්තනය සංශෝධනය කර දුන් වේරහැර ඤාණරතන ස්වාමීන් වහන්සේට ස්තූති වන්ත වෙමි.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளியாப்பிட்டி இந்து மகா சங்கத்தாரால் நிறுவப்பட்ட
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம்
28 - 6 - 63 ல் நடைபெற்றது



நடுவில்; பிரதிஷ்டாகுரு யாழ்வண்ணை பிரம்மஸ்ரீ ச. இராமசாமிக் குருக்கள்
வலதுபக்கம்: கோவில்குரு இ. சண்முகசர்மா
இடதுபக்கம்; கும்பாபிஷேக சங்கல்பதாரா திரு. சு வேலாயுதர் குடும்பத்தினர்

கோவிலின் இன்றைய தோற்றம் 8 – 6 – 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேக விளக்கம்

— பா. சிவராமகிருஷ்ண சர்மா, B. Sc. (Cey.) Dip. in Ed. (Cey.)

எங்கும் வியாபித்து நிற்கும் பரம் பொருளாகிய இறைவனுக்கு நான்கு திசைகளிலும் எல்லைகளை வரையறுத்து திருக்கோயில்களை அமைத்து அதனை இறைவனின் உறைவிடமாகக் கருதும் கோட்பாடு ஆன்மீக ஈடேற்றத்துக்காக ஆகமங்கள் நல்கும் வழிவகை எனலாம்.

குணம் குறி போன்ற இயல்புகளெதனையும் கொண்டிராத இறைவனை குணம் குறிகளைக் கொண்டு வகுக்கும் எல்லைக் கோட்டுக்குள் புறத்தோற்ற உருவேற்றி எங்கள் கட்புலனுக்குள் உட்படுத்த மேற்கொண்ட முயற்சியின் பலனே நாம் வழிபடும் இறைவனின் பல்வேறு திருவுருவக் கோலங்களாகும் உருவமற்ற இறைவன் ஆன்மாக்களின் கருணை மேலீட்டால் பல்வேறு உருவங்களைப் பெறுகிறான்.

உபநிடதங்களில் சகுணநிலை (உதாரணம் சுவேதாசுவதிரி உபநிடதம்)கூறும் பகுதிகள் பல்வேறு பண்புகளைக்கொண்ட இறைவனைச் சித்தரிக்கின்றன விக்கிரகங்கள் பற்றிய பல்வேறு குறிப்புகள் ,,பாணினி,, இயற்றிய அஷ்டாத்தியாயில் காணப்படுகின்றன.

பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாயினும் ஆன்மாக்கள் வழிபட்டு யோக மோட்சம் அடைய ஆலயத்தில் திருவுருவைப் பிரதிஷ்டை செய்து பிரார்த்தித்து அபிஷேகம் செய்தலே "கும்பாபிஷேகம்,, அல்லது "குட முழுக்கு,, என்று கூறப்படும்

கும்பாபிஷேகம் நான்கு வகைப்படுவன புதிதாக ஓர் அமைவிடத்தில் திருவுருவை வைத்து பாலப்பிரதிஷ்டை நடத்தி கோயில் கட்டி பாலாலய மூர்த்தியைக் கும்பத்திலே ஆவாகனம் செய்து மூலஸ்தானத்தில் உள்ள மூர்த்தியில் சேர்ப்பித்து அபிஷேகம் செய்வது ஆவர்த்தம் எனப்படும்.

வெகு காலத்துக்கு முன் அமைக்கப்பட்ட ஷேத்திரம் பூஜை, புனஸ்காரங்கள் இல்லாமல் அழித்து, சீர்குலைந்த நிலையில் திருப்பணிகள் செய்து திருத்தி ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் செய்வது அனுவர்த்தம் எனப்படும்.

கருவறை, விமானம், கோபுரம், பிராகாரம் போன்றவைகளில் பழுது உண்டானாலும், விக்கிரகங்களின் அட்டபந்தனத்தில் நெகிழ்வு ஏற்பட்டாலும், விமானம், கோபுரங்கள் முதலியவற்றில் உள்ள விக்கிரங்களில் பழுது நிகழ்ந்து உடைபாடுகள், ஏற்பட்டால் அல்லது வர்ணம் வெளிறிப் போய் விட்டால் பாலாலயம் செய்து தேவாலயத்தை சீர்படுத்தி கருப்பக்கிருத்தில் பிரதிஷ்டை செய்து குட தண்ணீராட்டு விழாவைச் செய்வது புனராவர்த்தனம் எனப்படும்.

மூலஸ்தானத்திற்குள் செல்லத்தகாத விலங்கினங்கள் போன்றவை உட்சென்று தீண்டியதனாலும் மூர்த்தியின் பிரத்தியங்கம் உபாங்கம் முதலியவற்றுள் ஏதாவது பழுதுகள் உண்டானாலும் அவற்றை திருத்தி உடன் செய்யும் குட முழுக்கு அந்தரீதம் என்றழைக்கப்படும்.

கும்பாபிஷேக வைபவத்தில் முதலில் நடாத்தப்படும் கிரியை அனுக்ஞை எனப்படும். விக்கிரகப் பிரதிஷ்டை செய்ய இறைவனின் திருவருளையும், உத்தரவையும் பெறும் நோக்கமாக இது நடாத்தப்படும். இதில் விக்கினேஸ்வர பூஜையினால் இடையூறுகள் வராமல் கும்பாபிஷேக கைங்கரியம் இனிதே நடந்தேற பத்திர புஷ்பம், சந்தனம், அட்சதை, தூப, தீப, நைவேத்தியங்களால் நடத்தப்படுகின்றது. இதில் ஒரு அம்சமான பஞ்ச கவ்விய பூஜை உடம்பிலுள்ள அர்த்தக்கரணங்களை சுத்தி செய்வதோடு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ள ஸ்தலத்தின் சுத்தி செய்வதாக அமையும். தொடர்ந்து இடம்பெறும் கிரியை புண்ணிய வேளையில் கும்பத்தில் வருணனையும் கும்ப தீர்த்தத்தில் புனித கங்கையையும் பூஜித்து திரவிய சுத்தி செய்வதாகவிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடத்தில் கும்பாபிஷேகம் நிகழ்வதற்காக ஒழுங்குகள் செய்து ஆலயம் கட்டியபின் நடைபெறும், கிரியைகளுக்காக தர்ம வழியில் சேர்த்து திரட்டிய திரவியங்களை சிவாச்சாரியர்களிடம் ஒப்படைக்கும் வைபவம் தனபூஜை எனப்படும். அத்தோடு மந்திர, கிரியை போன்றவற்றை உரிய முறையில் செய்யாவிடில் உண்டாகும், குற்றம் சிவாச்சாரியார்களையும் சிற்பக்கிரியைகளினால் உண்டாகும், குற்றங்கள் சிற்பாசாரியாரையும், முகூர்த்த நிர்ணயத்தால் ஏதாவது குறை குற்றம் ஏற்படின், அவை சோதிடரையும் சாரும். இவற்றுள் குற்றம் குறைகள் இல்லை என்பதை தீர்மானித்து தனபூஜை முடிவுறும்.

ஆலயம் கட்டுவதற்கு சேகரித்த திரவியத்தை பிரித்து பங்கிட்டு செய்வதை திரவிய விபாகம் என்பர். முழுத்தொகையையும் மூன்று பங்காக்கி ஒரு பங்கு ஆலயக் கட்ட வேலைகளுக்கும், இரண்டாவது பங்கு நித்திய நைமித்திய கிரியைகள், ஆபரணங்கள் போன்றவற்றுக்கும், மூன்றாவது பங்கு பதினொரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு பின்வருமாறு கும்பாபிஷேகத்துக்குச் செலவிடப்படும்.

1. யாகசாலை நிர்மாணம் போன்றவற்கு — 2 பாகம்
2. யாகத்திரவியங்களுக்கு — 1 பாகம்
3. அபிஷேக திரவியங்களுக்கு — 1 பாகம்
4. ஆசாரிய சம்பாவனை முதலியவற்றுக்கு — 2 பாகம்
5. மூர்த்தி பரர்களுக்கு — 1 பாகம்
6. வேதாகி திருமுறைகளுக்கு — 1 பாகம்
7. தானம் முதலியவற்றுக்கு — 1 பாகம்
8. சிவாச்சாரியார் போஜனம், அன்னதானம் — 1 பாகம்
9. சிற்பாசிரியர் பரிஜனங்கள் மண்டலாபிஷேகம் முதலியவற்றுக்கு — 1 பாகம்

பிரதான ஆச்சாரியரையும் (குருவையும்) சர்வபோதகரையும், சர்வ சாதகரையும், யாக சம்ரக்ஷகரையும், மற்றும் குருமாரையும் வணங்கி அவர்களிடம் கும்பாபிஷேக திரவியங்களையும் மற்றவற்றையும் கொடுத்து கும்பாபிஷேகத்தை ஏற்ற முறையில் நடத்தி அருள்பாலிக்கும் வண்ணம் கேட்டு நடைபெறும், வைபவம் ஆசாரிய வர்ணம் எனப்படும்.

அடுத்து ஆலயத்தைக்கொண்ட அந்த பிரதேசத்தில் (அல்லது கிராமத்தில்) உள்ள அசுர, இராட்சத, பிரும்ம ராட்சத, பைசாசத் தேவதைகளை நோக்கி செய்யப்படும் கிரியை கிராம சாந்தி எனப்படும். சிவாசாரியர்கள் பிரவேசம் செய்து கும்பாபிஷேகம் செய்யப்படவுள்ள பிரதேசத்தின் எட்டுத்திக்குகளிலும் இருக்கும் இயக்கர், இராட்சதர், பைசாசர், பிரம்ம இராட்சதர் பூதர். காளி, சாளி, பைரவர் முதலியவர்களை நோக்கி நடைபெறும், சமயாசார வைபவம் பிரவேச பலி என்றழைக்கப்படும்.

இதனை அடுத்து நிகழும் கிரியை திசா–ஹோமம் எனப்படும். இது நான்கு திசைகளிலும் முறையே பாசுபதாஸ்தம், அஹோராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம், முதலியோரை பூஜை செய்து கும்பாபிஷேகம் நடைபெறும் வரை காவல் செய்யுமாறு பணிக்கப்படும் பூஜையாகும்,

அடுத்து ஆலயத்துள் குடமுழுக்குக்கு முன், ரிக்ஷோக்னம் என்ற துஷ்ட தேவதைக்கு பலீகரண ஓமத்தை பஞ்ச தைலங்களுடன் காஞ்சூரம் சமித்து, தவிடு, கடுகு வெண்கடுகு, மிளகு போன்றவற்றால் செய்து சுத்தம்செய்யும் கிரியை நடைபெறும். இது இரஷோக்கினஹோமம் எனப்படும் இங்கு மூன்று மேடைகளை நிறுவி மத்தியில் கும்பம் வைத்து அதில் ரிஷோிக்னி தேவதையை வடவாமுகாக்கினிக்குப் பிரதீபீடாகப் பாவனைசெய்து செய்து பூஜைசெய்து, அதன் தென் பக்கத்தில் வெள்ளை வஸ்திரம் விரித்து அதன்மேல் தேங்காயை வைத்து மத்தியின் வடக்குப் பக்கத்தில் சிவப்பு வஸ்திரம் விரித்து அதன் மேல் வாள் ஒன்றை வைத்து பூசிப்பர். இங்கு தேங்காயில் சிவனையும் வாளைச் சுற்றி அசிதாங்க பைரவர், குரு பைரவர் சண்ட பைரவர் முதலிய எண்மரையும் வாளில் மஹாதேவி, பார்வதி, வாக்தேவி, கிருத்திகை, மகாலட்சுமி, ரத்த சக்தி, காளி, சண்டிகை,வீரசக்தி முதலான சக்திகளையும் வழிபடுவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சிவாச்சாரியர்கள் தங்கள் சிந்தையில் ஆசமனம், பிராணாயாமம், சங்கல்ப்பம், கர்க்கியம், உண்டாக்கி தங்களை புரோட்சித்து தங்களில் மூர்த்திகளை வழி படுவது ஆயூஷ்கர்மம் எனப்படும்.

குறித்த முகூர்த்தத்தில் கும்பாபிஷேக நவக்கிரக தோஷ பரிகாரார்த்தமாக செய்யப் படுவது நவக்கிரகமகம் என்றழைக்கப்படும் இது யசுர்வேத கண்வசம்கிதையில் 29 வது அத்தியாயத்தில் விரிவாக எடுத்துக் கூறப் பட்டுள்ளது. கும்பாபிஷேக வைபவத்தால் அதீதமழை, கடும் வரட்சி, போன்ற இயற்கை உபாதைகள், ஏற்படா வண்ணம் இந்த நவக்கிரக யாகம் செய்யப்படுகின்றது.

பூமியானது அசத்தாக ஜட சம்பந்தம் உள்ளதால் அதற்கான பரிகாரங்களைச் செய்து சத்பாவம் உண்டாகும் வகையில் அமையும் அடுத்த கிரியை வாஸ்து - சாந்தி எனப்படும். இப்பூஜையின் இறுதியில் சர்வ சங்கார புருஷனை வாஸ்துவை வைக்கோலி னுலும், தர்ப்பைப் புல்லினுலும் புருஷ வடிவத்தில் கட்டி பூஜித்து வாஸ்து சாந்தி ஓமக்குண்டத்திலுள்ள அக்கினியில் எரித்து குறிப்பிட்ட பிரதேசத்தின் அசுத்தத்தை அகற்றி தூய்மைப்படுத்துவர்.

அடுத்து வேத விற்பன்னர்களால் பிருதுவி தொடக்கம் சுத்த தத்துவம் ஈருக எல்லாத் தத்துவங்களையும் ஓமத்துடன் சுத்திகரித்தல் விற் பிரபோசனம் என்னும் கிரியையாகும்.

தொடர்ந்து நடைபெறும், அங்குரார்ப் பணக் கிரியைக்காக சுத்தமானதொரு இடத்தில், மண் வெட்டியை சிவாஸ்திர மாகப் பூஜித்து பூமியிலிருந்து மூன்று அல்லது ஐந்து தடவைகள் மண்ணை வெட்டி எடுக்கும் கிரியை நடைபெறும். இது மிருந்சங் - கிரகணம் என்றழைக்கப்படும்.

பின்பு நெல் முதலிய நவதானியங்களை பாலில் ஊற வைத்து, உலகத்தில் சமாதா னம், தானியவிருத்தி போன்றவை செழிப் புற வேண்டி ஒசரி - சூக்தம் ஓதி வித்துக் களை முளைப்பதற்காக மண்ணுடன் கலந்து விடும் கிரியை அங்குரார்ப்பணம் எனக் கூறப்படும்.

அடுத்து இரட்சித்தலுக்காக பிரதான சிவாச்சாரியருக்கும் மற்றையோருக்கும் மணிக்கட்டில் கட்டப்படும் மஞ்சள் கயிறு இரஷாபந்தனம் என்ற கிரியையோடு நடை பெறும், குட முழுக்கு வைபவம் குறை வின்றி நிறைவேற எவ்வித இடையூறுகளும் ஏற்படாதிருக்க இறைவியின் கர்ப்பராடியி லிருந்து தோன்றிய ராகராசனை வழிபட்டு கங்கணம் கட்டும் வைபவமாகும்.

பின்னர் புதிதாக உருவாக்கப்பட்ட மூர்த்திகளுக்கு பஞ்ச பூதங்களின் தொடர்பை விளக்கி நடத்தப்படும் வைப வங்கள் இரத்தின-நியாசம், நைநோன்மின னம், தானியாதிவாசம், சயனுரோகணம். இராமப்பிரதட்சணம், ஆதியவையாம். தொடர்ந்து யாகசாலையில் சப்த தாணியங் களைப் பரப்பும் கிரியை யாகசாலா தானி யாதி ஸ்தாபனம் எனவும், ஞானக்கினிக் குத் தேவைப்படும். இநருப்பை சூரியனி லிருந்து பெறும் கிரியை சூரியகாந்தி சங் சிரகணம் எனவும், சர்வ வியாபிலான இறைவனைப் பூஜிப்பதற்கு நேர்முகப்படுத் திக் கொள்வதைக் காட்டும் கிரியை பிர சன்னி - அபிஷேக பூஜை எனவும் அழைக்கப் படுகின்றது.

அடுத்து இடம் பெறுவது கடஸ்தாப னம் என்னும் கிரியையாகும் குடத்தில் சப்த தாதுக்களும், ஜீலனும் உண்டாக்கு வதற்காக கும்பத்தின் அடியில் ஆண்ம - தத் துவத்தையும், பிரம்மாவையும் நடுவில் வித் தியா தத்துவத்தையும் விஷ்ணுவையும், நுனியில் சிவ தத்துவத்தையும், சந்திரனை யும் பூசிப்பது வழக்கம். கும்பத்தில் நவ சக்திகளையும், கும்பத்தைச் சுற்றியுள்ள மூவிலை நூலில் சரஸ்வதி, லக்ஷ்மி, ரௌத் திரி ஆகியோரையும் கும்பத்திற்கு பிடிக்கப் படும் தூபத்தில் அர்ச்சினி சத்தியையும், குடர் தீர்த்தத்தில் புண்ணிய நதிகளின் நீரையும், மத்தியில் வருணனையும் நவரத் தினங்களில் நவ சக்திகளையும். சுவர்ண தாமரைப்பூவில் சதாசிவத்தையும் பல்வேறு வாசனைத் திரவியங்களில் ஏழு மாதுருக்களை யும் பூஜித்து குடத்தில் வைத்து மாவிலையை, சடையாகவும், தேங்காயைச் சிரசாகவும், கூர்ச்சர்தை முடியாகவும், வஸ்திரத்தைத் தோலாகவும், யக்ஞோப வீதத்தை பஞ்சப் பிரம்ம மந்திரமாகவும் பூஜிப்பது இக் கிரியையின் தாத் பரியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து நிகழ்வது கலா கர்ஷணம் என்னும் கிரியையாகும். சக்தியிலிருந்து கலையும், கலையிலிருந்து தத்துவமும், தத்துவத்திலிருந்து புவனமும், புவனத்திலிருந்து வர்ணமும், வர்ணத்திலிருந்து பதமும், பதத்திலிருந்து மந்திரமும் உண்டாயின. ஆக, கலாநியாசத்தால் சர்வக்ர சக்தியும் தத்துவநியாசத்தால் நித்திய திருப்பதித்துவமும், புவன - நியாசத்தால் அநாதி போதத்துவமும் வர்ண நியாசத்தால் சுவதந்திரத்துவமும் பதநியாசத்தால் அலுப்த சக்தித்துவமும் மந்திர நியாசத்தால் அனந்த சத்தித்துவமும் சித்திக்கும்.

யாகசாலைப் - பூஜை அடுத்து இடம் பெறும், ஆகமங்களின் சூத்திர பேதங்களுக்கமைய ஆலயத்துக்கு முன்பாக அல்லது கிழக்கு வடக்காக இது அமையும். நிலத்தை (பிருதுவி) குறிப்பது கிழக்குத் திக்கில் அமையும் நவற்கோண குண்டம், நீரைக் குறிப்பது (காப்பு) தெற்கில் அமையும் பிறைவடிவ குண்டம். நெருப்பைக் (தேயு) குறிப்பது மேற்கில் அமையும் முக்கோண குண்டம், காற்றை (வாயு) குறிப்பது வடமேற்கில் அமையும் அறுகோண குண்டம், வான வெளியைக் (ஆகாயம்) குறிப்பது மேற்கில் அமையும் வட்டமான குண்டம், சூரியனைக் குறிப்பது வடக்கில் அமையும் தாமரைப்பூ வடிவமான குண்டம். சந்திரனைக் குறிப்பது வட கிழக்கிலுள்ள எண் கோண குண்டம்.

அடுத்து நடைபெறும், கிரியை பதவினியாசம் எனப்படும். இங்கு ஆகார்ய சில்பின சார்த்தம், பிரவி சேத்கர்ப கேசகம் என்ற காரணாகம விதிக்கிணங்க ஆசார்யமும், சிற்பசாஸ்திரியும், மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யும் இடத்தை தீர்மானித்தல் இடம்பெறும்.

தொடர்ந்து கருவறையின் மேல் விமானத்தின் பத்மத்தில் ஸ்தூபிஸ்தாபன வைபவமும், சோதி வடிவமான இறைவனைக் குறிக்க தீபஸ்தாபன வைபவமும், பல்வேறு இரத்தினங்களை பீடத்தின் மேல் இடும் இரத்தின ஸ்தாபன வைபமும், குறித்த உலோகத் தகட்டில் கோடுகள் கோணங்களால் உரிய முறைப்படி வரைந்த தகட்டை மூர்த்தியின் பீடத்தினுள் வைக்கும் யந்திர ஸ்தாபன வைபவமும், அதன் மேல் மூர்த்தியை வைக்கும் பிம்ப ஸ்தாபன வைபவமும், மூர்த்தியை பீடத்துடன் இணைக்கும் அஷ்ட பந்தனம் சாத்துத் வைபவமும் ஆசாரியர், அன்பர்கள் எண்ணெயை சாத்தும் தைலாப்பியங்கம் என்னும், வைபவமும், பிம்பத்தைச் சுத்திகரிப்பதற்காக உதகம், கற்தம், புஷ்பம். பத்திரம், காசாயம், மிருத்தி, பீஜம், பல்லவம், இரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஒசதி, இவ்வியம், குசம், சிருங்கம் என்னும் பதினுரு வகையான திரவியங்கள் நிரப்பிய கவசங்களை பூசித்து ஹோமம் செய்து முறைப்படி அபிஷேகம் செய்யும் பிம்ப சுத்தி என்னும் வைபமும் நடைபெறும்.

பின்னர் விக்கிரகங்களுக்கு மஞ்சள் நூலினலான காப்புக்கட்டும் பிம்பரட்சாபந்தம் என்னும் கிரியை இடம்பெறும். தொடர்ந்து ஆசாரியர் ஆதாரசக்தி தொடக்கம் பஞ்சமாவரணம் வரை பூஜித்து கலை முதல் மந்திரம் ஈருக சாங்கோபாங்கமாக ஆலய பேதங்களாக பிம்பத்துக்கு தர்ப்பை நுனியால் நியாசம் செய்யும் கிரியை இடம் பெறும்

அடுத்து இறைவனை அக்கினி வடிவாக பூசிக்கும் விசேட திரவிய ஓமம் நடத்தப்படும். இதன் இறுதியில் ஹோமத்தை மூல மூர்த்தியிடம் தொடர்பு படுத்தும் ஸ்பரிசாருதி என்னும் கிரியை நடைபெறும்.

அடுத்து கருணையினுல் பக்தி மேலீட்டால் அருள் செய்ய வேண்டும் எனப் பிரார்த்திக்கும் ஸ்தோத்திர வந்தனம் என்னும் துதிபாடும் கிரியை நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து ஆசாரியரை கௌரவிக்கும் ஆசாரிய பூஜையும், ஓமத்தின் கிரியைகளான அக்கினி சம்போஜனம், பூரணுகுதி என்னும் வைபவம் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து சோடோபசார தீபாராதனைகளும், வேத, பாராயண தேவாரங்கள் போன்றவை ஓதப்பட்டு, விமானங்களில் உள்ள ஸ்தூபி கும்பாபிஷேகமும், மூர்த்திகளுக்கு மகா கும்பாபிஷேகமும் நடைபெறும். கும்பாபிஷேகம் நடைபெற்றவுடன் தசதர்சனம் என்னும் சுப தர்சனம் இடம் பெற்றவுடன் யாகத்தில் தவறு ஏற்பட்டிருந்தால் அதற்கு பரிகாரமாக பிராயச்சித்த ஆகுதி என்னும் ஓம வைபவம் இடம் பெறும்.

இறுதியாக குருமார்களுக்கு வழிபாடு செய்யும் முகமாக ஆசார்ய உற்சவத்துடன் கும்பாபிஷேக வைபவம் இனிது முடிவுறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



28 – 6 – 63ல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகம்



புனருத்தானம் செய்யப்பட்ட மூலஸ்த்தான
கோயில் மகா கும்பாபிஷேகம் 8-6-1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில் அமைப்பு

— திருமதி விமலா புஸ்பநாதன் —
(ஆசிரியை, குளியாப்பிட்டி முஸ்லீம் வித்தியாலயம்)

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம் பொருளுக்கு உலகமே கோயிலாகும். மெய்யடியார்கள் தம் மனக் கண்களால் வழிபட்டு வணங்க இறைவன் இதயத்திலே கோயில் கொண்டருளுகின்றான். ஆயினும் சாதாரண மக்கள் ஆண்டவனை உணர்வொன்றித் துதிக்க கற்கோயில்கள் உதவுகிறது.

தலை தலைமுறையாக பக்தர்கள் தவமும், செபமும், தியானமும், பிரார்த்தனையும் செய்த இடங்களே கோயில்கள். நிலத்தை அகழ்ந்தால் நீரை பெறலாம். ஆனால் கிணறும், குளமும் இலகுவாகவே நீர் வேட்கையை தீர்ப்பதற்கு தயாராக இருக்கின்றது அதை போல பக்தி தாகத்தை தீர்ப்பதற்கு பவித்திரமான இடமாக கோயில் விளங்குகிறது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. அதாவது என்ன இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆலயம் ஒன்று ஊருக்கு இன்றியமையாதது, மக்களுடைய ஆன்ம ஈடேற்றத்துக்கும், நல்வாழ்வுக்கும், ஆதாரமாக இருப்பது 'ஆலயம்' என்பதை நம் முன்னோர் உணர்ந்திருந்தார்கள்.

பழைய காலத்திலே கோயில்கள் மரத்தினாலும் மண்ணினாலும் கட்டப்பட்டன. இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பல்லவ மன்னர்களே முதன் முதலில் கோயில்களை கல்லாற் கட்டி எழுப்பினார்கள். அதன் பின்பு சோழ மன்னர்களும் கற்கோயில் எழுப்பும் பணியில் ஈடுபட்டு பெரிய கோயில்களை கட்டி எழுப்பினர்கள். இவ்வாறே கோயில் கட்டிட அமைப்பு படிப்படியாக வளர்ச்சியடைந்தது. கோயில்கள் மக்களின் உடலமைப்பு முறையிலே அமைக்கப்பட்டுள்ளன.

கோயில் கட்டும் விதிகள் பற்றி ஆகமங்களில் விளக்கி கூறப்பட்டுள்ளது. கோயிலிலே மூல விக்கிரகம் எழுந்தருளியிருக்கும் இடம் கருவறை அல்லது கருப்பக்கிரகம் எனப்படும். மூலஸ்தானம் என்றும் சொல்லப்படுகிறது. இது பெரும்பாலும் கிழக்கு நோக்கியதாக இருக்கும். இதன் மேற் கூரை 'தூபி' எனப்படும் இதனை விமானம் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. மூலஸ்தானத்திலே எழுந்தருளியிருக்கும் மூலத்தான மூர்த்தியை கொண்டே கோயில் தன் பெயரை பெறும். மூலமூர்த்தி சிவலிங்கமானல் சிவன் கோயில் என்றும் சிவசுப்பிரமணியனாக இருந்தால் சிவசுப்பிரமணியன் கோயில் எனவும் பெயர் பெறும்.

விமானத்துக்கு முன் இருப்பது அர்த்த மண்டபம் ஆகும். இங்குதான் சிவாசாரியர்கள் நின்று சுவாமிக்கு தீபாராதனை, உபசாரங்கள் முதலியன செய்வர். அர்த்த மண்டபத்துக்கு முன் இருப்பது மகா மண்டபம் ஆகும். இங்கே உற்சவ மூர்த்திகள் எழுந்தருளப்பட்டிருக்கும். பூசைக் காலங்களில் அடியார்கள் இங்கே நின்றுதான சுகந்த தூபமிடல், திருமுறை ஓதல் முதலிய தொண்டுகளையும் வழிபாடுகளை மேற்கொள்வார்கள். மகா மண்டபத்துக்கு முன் ஒரு திறந்த மண்டபம் இருக்கும், இதனை சங்காபிடேகம் போன்ற சிறப்புக் கிரியைகள் செய்வதற்கு உபயோகபடுத்தப் படுகிறது.

இந்த மண்டப தொகுதியை சுற்றி நாற்புறமும் மதில்களும், சிறு அறைத் தொடர்களும் அமைந்திருக்கும், அறைத் தொகுதிக்கும், மண்டபத் தொகுதிக்கும் இடையேயுள்ள வெளியிடம் உள் வீதி என்று பெயர் பெறும். புறத்தே இருப்பது வெளிவீதி ஆகும்.

நிருத்த மண்டபத்துக்கு முன் தம்ப மண்டபம் உண்டு, இங்கே மூல விக்கிரகத்துக்குரிய வாகனம், பலிபீடம், கொடிமரம் முதலியன இருக்கும். கருவறை முதலாகிய மண்டப தொகுதியை சுற்றி இருக்கும் சிறு அறைகள் பரிவார தெய்வங்கள் எழுந்தருளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கும். தெற்கு பக்கத்திலேயுள்ள அறையிலே சமய குரவர் நால்வரின் விக்கிரகங்களும், மேற்கில் இருக்கும் அறைகளில் பிள்ளையார், சோமஸ்கந்தர், மகா விட்டுணு, தண்டாயுதபாணி, மகாலட்சுமி முதலிய திருமேனிகள் எழுந்தருளியிருக்கும். அடியார்களுக்கு அவர்கள் செய்யும் வழிபாட்டின் பயனை வழங்கும் சண்டேசுர மூர்த்தி கருவணயின் வடக்கே ,தெற்கு நோக்கிய சிறு அளவிலான தனிக்கோயிலிலே எழுந்தருளியிருப்பார்.

கோயிலுக்கு சிறப்பும் அழகும் தருவது கோபுரமாகும். இதனை தூல லிங்கம் எனவும் வழங்குவர் கிழக்கு வாயிலின் மேலே உயரமாக கட்டப்படுவது அரச கோபுரம் எனப்படும். தூரத்தில் இருப்பவர்களுக்கு இதனை கண்டவுடனேயே தெய்வீக உணர்ச்சியினை ஊட்டத் தக்கவிதத்தில் அமைந்திருக்கும்.

கோயிலின் முக்கிய வாயிலின் பக்கத்தில் மணிக் கூண்டுக் கோபுரம் அமைக்கப்பட்டிருக்கும். இங்கே இருக்கும் பெரிய மணி கண்டாமணி எனப்படும் இது பூசைக் காலங்களை அடியார்களுக்கு அறிவிப்பதுடன் தேவர்களை கூவியழைப்பதற்கும், அரக்கர்களை விரட்டு வதற்கும் அடிக்கப்படும் என்பர்.

இவ்வாறான அமைப்பைக் கொண்டு அமைந்த திருக்கோயிலிற்கு இடைவிடாது சென்று வழிபட்டு ஆன்ம ஈடேற்றத்திற்கான வழியை கடைப்பிடித்து வாழ்வோமாக.

சிலேடைக் கவிதை

வெங்காயம் சுக்கானல் வெந்தயத்தால் ஆவதென்ன
இங் கார் சுமந்திருப்பார் இச்சரக்கை - மங்காத
சீர கத்தைத் தந்திடிரேல் தேடேன் பெருங்காயம்
ஏர கத்துச் செட்டி யாரே.

கருத்து:-

காயம்	—	உடம்பு
வெந்தயம்	—	வெந்து சாம்பலாதல்
சுக்கு	—	சிதறி
சீரகம்	—	சீரான உள்ளம்
ஏரகத்துச் செட்டி	—	திருவேரக முருகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வள்ளி தெய்வானை சமேதராய் சிவசுப்பிரமண்ய சுவாமி
மூலஸ்த்தானம்



ஶ்ரீ பழநீ ஆண்டவர்



ஶ்ரீ கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளும் வழிபாடும்

— திருமதி விமலா புஸ்பநாதன் B. A. —
(ஆசிரியை, குளியாப்பிட்டி முஸ்லீம் வித்தியாலயம்.)

இறைவனை அடைவதற்கான வழிகளில் அறிவு வழி, செயல் வழி, என இரு முறைகள் பற்றி எமது மதமாகிய இந்து மதம் வலியுறுத்தி செல்கிறது. பல பல நூல்கள் கற்ற அறிஞர்கள் பேரறிவின் மூலம் இறைவனை வழிபடுதல் அறிவு வழியாகும். இது எல்லோராலும் கடைப் பிடிக்க கூடியதன்று, அறிஞா முதல் பாமரர் அனைவருக்கும் இறை வழிபாட்டை எளிதாக்குவது "கிரியை" என்ற செயல் வழியேயாகும்.

இந்த விதத்திலே கோயில்களில் நடைபெறும் கிரியைகளை அபிடேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அருச்சனை, வாழ்த்துதல், தோத்திரம் என பல வகையாக பாகுபடுத்தலாம். ஒவ்வொரு கோயில்களின் மரபுக்கும், வசதிக்கும் ஏற்றபடி பூசைகள் நிகழ்வது வழக்கம். சில கோயில்களில் இரண்டு நேரமும், சில கோயில்களில் மூன்று நேரமும், சில கோயில்களில் ஆறு காலமும் பூசை நிகழ்கிறது.

திருக்கோவில்களிலே இறைவனை முகமன் கூறி எழுந்தருளச் செய்து பலவித உபசாரங்களைச் செய்வது பூசை என சொல்லலாம். எல்லா மக்களும் வழிபடும் பொது இடமாக ஆலயம் விளங்குகிறது. அங்கே இறைவன் நீக்கமற நிறைந்திருப்பதுடன் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ளார். அந்த திருக்கோலத்தை யாவருடைய கண்ணும் கண்டு மகிழவும், கைகள் தொழவும், வாய் ஆண்டவன் புகழை பாடவும், காது அப் புகழ் கேட்கவும் என நமது ஐம் புலன்களும் ஒன்று படும் இடமாக பூசைக் காலம் விளங்குகிறது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரமும் கடவுள் சிந்தனை, இறையுணர்வை ஏற்படுத்தி கொள்ளவே வழிபாடு செய்கிறோம். இறையுணர்வு மேலீட்டால் எல்லா நல்ல குணங்களும், சிறந்த பண்புகளும் சிந்தையிலே குடி கொள்ளும். இதனால் நல்ல சமுதாய அமைப்பு உருவாகும்.

எல்லா உயிர்களின் நன்மைக்காகவும் கோயிலில் நடைபெறும் பூசையை பரார்த்த பூசை என சொல்வர். திருக்கோவில்களிலே முதலில் விநாயகருக்கு செய்யப்பட்டு பிறகே மூலதன மூர்த்திக்கு செய்யப்படும். அதன் பின் ஏனைய மூர்த்திகளுக்கு பூசை நடைபெறும். மூர்த்திகளுக்கு ஆராதனை முடித்த தன் பின் நந்திக்கும் பலி பீடத்துக்கும் பூசை நடக்கும் அதன் பின் சண்டேசுரர் பூசை நடைபெறும்.

பூசையின் முதல் அங்கம் அபிடேகமாகும். அதற்கு வேண்டிய பரிசுத்தமான நீர் தீர்த்தம் என்று சொல்லப்படும். இதை கோவிலில் அமைந்திருக்கும் கிணற்றிலிருந்து எடுத்து அதனை மந்திர உச்சரிப்பின் மூலம் புனிதமாக்கி பூசைக்கு பயன்படுத்தப் படுகிறது. இந்த தீர்த்தம் தவிர பால், இளநீர் முதலியனவும் அபிடேகத்துக்கு உரிய திரவியங்களாகும், விஷேட பூசைக் காலங்களில் பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், விபூதி, சந்தனம், குங்குமம் என்பனவற்றால் அபிடேகம் செய்வார்கள்.

அபிடேகத்துக்கு பின் ஆடை அணிகலன்களால் ஆண்டவனை அலங்கரிக்கப்படுகிறது. பொன்னாலும், நவரத்தினங்களாலும் ஆன ஆபரணங்கள் அணிதற்குரியவை என ஆகமங்களிலே கூறப்படுகின்றன. அலங்காரத்தின் அடுத்த அம்சம் பூமாலைகளினால் அலங்கரிப்பது. தனித்தனி நிறத்திலான மாலைகள், நிறங்கள் விரவிய மாலைகள் என பலவித மாலைகள் இறைவனுடைய எழிற் கோலத்திற்கு மேலும் எழில் ஊட்டுவதாக உள்ளது.

இதன் பின் தூபதீபம் காட்டி நைவேத்தியம் ஆண்டவனுக்கு சமர்ப்பிக்கப்படும். தீபாராதனை என்பதன் கருத்து தீபத்தால் இறைவனை வழிபடுதலாகும். திருக்கோவிலிற்கு வருவோர் தீபாராதனையை காண தவறக் கூடாது. அச் சமயத்தில்தான் இறைவனது திருக்கோலத்தை நன்கு பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசிக்க முடிகிறது. தீபங்கள் மூன்று முறை பிரணவரூபமாக காட்டப்படுகிறது. முதலில் காட்டப்படுவது உலக நன்மைக்காகவும், இரண்டாவது முறை காட்டுவது நாட்டு நன்மைக்காகவும், மூன்றுவது தடவை காட்டப்படுவது எல்லா உயிர்களினது நன்மைக்காகவும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

தீபாராதனையின் போது அடுக்கு தீபம், ஒற்றைத் தீபம், கும்ப தீபம், கற்பூர தீபம், நாக தீபம், விருடப தீபம், வில்வதீபம் என பல வகை தீபங்கள் காட்டப்படுகின்றன. இறுதியில் கண்ணுடி, குடை, சாமரை, விசிறி ,கொடி, ஆலவட்டம் என்ற உபசார பொருட்களும் தீபங்கள் போல காட்டி உபசரிக்கப்படுகின்றது.

தீபாராதனையின் பின் நிகழ்வது அருச்சனை இறைவனது திருநாமங்களை ஒவ்வொன்ருகக் கூறி மலர் தூவி அருச்சித்தல் நடைபெறும். அருச்சனைக்கு அடுத்தபடி தோத்திரம் இடம் பெறும். தமிழ் வேதமாகிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் திருப்புகழ் பாடி இறைவனை தோத்தித்து வழிபடப் படுகிறது.

ஆகவே இந்து சமயத்தவராகிய நாம் அனைவரும் நிலையில்லாத இவ்வாழ்விலே நிலைபேறுடையவனுகிய இறைவனை இடையருது தியானித்து, எமது ஆகமங்களில் குறிப்பிட்டுள்ள படி சரியை, கிரியை தொண்டுகளை செய்து இம்மையிலும், மறுமையிலும் இன்புற்றிருப்பதற்கான ஈடேற்றத்தை தேடி வாழ்வோமாக.

கந்தனை சிந்தனையில் வைத்து வந்தனை செய்வோம்

செங்கமலப் பொற்பாதம் இரண்டும் போற்றி
சீர்கழல்கள் போற்றிசெஞ் சேவல் போற்றி
பூங்கமலப் போதொளிர்செம் மேனி போற்றி
பொன்னரைஞாண் பொற்பட்டுப் பணிகள் போற்றி
தேங்கமழும் மலர்மாலை மார்பம் போற்றி
திருக்கரங்கள் கண்கள் ஈராறும் போற்றி
ஓங்குபெருங் கருணைமுகம் ஆறும் போற்றி
ஒண்சுடரே திருமுருகா போற்றி போற்றி

பிள்ளைத்தமிழ்

பேரா தரிக்கு மடியவர்தம்
பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா வென்றுன் றிருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஶ்ரீ மகா விஷ்ணு



வள்ளி தெய்வானை சமேதராய்
சிவ சுப்பிரமணிய சுவாமி உற்சவமூர்த்தி

ஶ்ரீ பத்திரகாளியம்மாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்ரமண்யன் தோத்திரம்

1. அழியாமுக்தி ஆனந்தம் அழித்திடும் குமரா
பழி பாவமெல்லாம் தீர்த்திடும் பாலனே முருகா
விழியாலுனைக் கண்டு வணங்கியே பேறுற்றோம்
குளியாப்பிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

2. களிநடம் புரிகின்ற கார்மயில் வாகனனே ஞான
ஒளிதரும் வேல் கொண்டு ஒற்றுமையை வளர்ப்பவனே தேன்
துளிபோலும் தெவிட்டாத தூய அன்பை தருபவனே
குளியாப்பிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

3. வழிதேடி பக்தர்கள் விருப்பமாய் நாடுகையில்தமிழ்
மொழிதந்து அறிவூட்டி முன்னேற வைத்தவனே துயர்
ஆழியிலே மூழ்குகையில் அருள்தந்து ஆண்டவனே
குளியாப்பிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

4. பாளிமொழி துணைகொண்ட பௌத்த மதத்தவரும் பேர்
எழில்கொண்ட உனைவணங்கி ஏன் கதிர்காம நாமமிட்டார் உன்
தொழிலெலாம் அன்பர்க்கு துயர்களைதல் ஆனதாலோ
குளியாப்பிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

5 கோழியது கொடியாக கானமயிலது வாகனமாக அருள்
பொழிகின்ற வேலவனே பொங்குகநின் அருள் வெள்ளம்
தெளிவுற்ற சிந்தையுடன்நின் துதிபாட வரமருள்வாய்
குளியாப்பிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

6 விழிநீர்மல்கி அழுதிட வரமருளு சண்முகனே
காளியுடன் திருமாலும் கரிமுகனும் வைரவரும்
களிப்புடனே சூழ்ந்திருக்க காலமெலாம் காத்தருள்வாய்
குளியாப்பிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

7. வீழினும் உயிரினும்உன் நாமம் மறந்திடாமல்
ஆழிபோல் துயருறினும்உன் அருளதனை வெறுத்திடாமல்
இளிவான சிந்தைநான் அடையாமல் அருள் தருவாய்
குளியாபிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

8. கிளியொன்று பிறர்கூற்றை குறையின்றி சொல்வதுபோல்
மொழிவண்ணன் அருணகிரி சந்தக் கவி தன்னை நான் பாடி
உளியாலே அடித்தாலும் உனைநாட வைத்திடுவாய்
குளியாப்பிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

9. தாளியிலே கடைந்திட்ட தயிர்போல் அடியேனுளம்
ஏழிசையால் என்றுமுன் துதிபாடி சிறப்புற வேண்டுமப்பா
கோளின் தாக்கமற கொடுங்கூற்றின் பாசக் கயிறற
குளியாப்பிட்டி சுப்ரமண்ய குருபரனே சரணமப்பா!

10 வாழிய சைவநெறி வாழியமுருக னடியவர்கள்
வாழிய மத ஒற்றுமை வாழியஅன்பும் பண்பும்
வாழிய நாட்டில் தர்மம் வாழ்வில்இன்பம் என்றுமே
வாழி குளியாப்பிட்டி சுப்ரமண்ய நாமமே!

— டாக்டர். சிவா இரவீந்திரா B. D. S
(பதில் மாவட்ட வைத்திய அதிகாரி.)
தள வைத்தியசாலை,
குளியாப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவில் கும்பாபிஷேக
சிறப்பு விழாவிற்கு

எங்கள் நல் வாழ்த்துக்கள்

★

குளியாப்பிட்டியில் கடந்த 30 ஆண்டுகளாக
பொதுமக்களின் நன்மதிப்பை பெற்ற
சிறந்த உணவகம்

நியூ வசந்தா கபே

காரம், மணம், குணம் நிறைந்த ருசியான உணவு வகைகள்
தயாரித்துக் கொடுக்கும் ஒப்பற்ற ஸ்தாபனம்.

அவசர ஆடர்கள் உடன் தயாரித்து
குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கப்படும்.

— உடனே விஜயம் செய்யுங்கள் —

உடலை வளர்ப்பது உணவு
உயிரை வளர்ப்பது உணர்வு

E. T. நாதன்
நியூ வசந்தா கபே
குளியாப்பிட்டி.

தொலைபேசி எண்: 037 - 41344

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தின் இன்றைய பரிபாலன சபை

இடமிருந்து வலம்: திரு. ஜெயராசா, திரு. நந்தகுமார், திரு. இ. தி. நாதன் (உப தலைவர்), திரு. வெள்ளைச்சாமி (காரியதரிசி), திரு. சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள், திரு. இ. பாலசிங்கம்ர் (தலைவர்), **Dr.** சிவா இரவீந்திரா (உப தலைவர்), திரு. க. பால சண்முகம் (பொருளாளர்) திரு. க. ரவீந்திரன்.

கும்பாபிஷேகத்திற்கு வருகைதந்த இந்து கலாச்சார அமைச்சர் மாண்புமிகு **S**. தேவராஜா அவர்கள் உரையாற்றுகிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

குளியாப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி
திருப் பொன் "ஊஞ்சல் பா"

கவிதை: உடப்பூரன்

காப்பு

சீர்பூத்த ஈழவள நாட்டின் மேவும்
சிவப்பதியாம் முன்னேஸ்வரம் பதியின் சார்பும்
ஏர்பூத்த குளியாபிட்டி நகரந் தன்னில்
கோயில்கொண்டு ஸ்ரீவள்ளி தேவ சேனு
சேர்சமேத சிவசுப்ர மண்ய சுவாமி
குடமுழுக்குத் திருமணத்து ஊஞ்சல் பாட
கார்பூத்த கணபதியின் கமல பாதம்
கருத்தினிலே வைத்திடுவோம் காப்பதாக

பரமசிவன் நெற்றியிலே பிறந்த பாலன்
சரவணமாம் பொய்கைதனில் தவழ்ந்த சீலன்
அரவணைத்த கார்த்திகையர் அன்புக் கோலன்
அன்னையுமை அணைப்பினிலே ஆறு முகன்
உரம்மலிந்த சூரர்குலம் மாய்த்த வீரன்
உலகோரைக் காக்கவென்றே குளியாப் பிட்டிப
புரமெழு ந்தாய் பொன்னடிகள் போற்றி போற்றி
ஸ்ரீ சுப்ர மண்ய சுவாமி ஆடீர் ஊஞ்சல்

ஆரணமாம் அரியதிருக் கால்கள் நாட்டி
அறிவுமிகு ஆகமங்கள் விட்டம் பூட்டி
பூரணமாம் உபநிஷதப் பலகை யாக்கி
புண்ணியநற் கந்தபுராண வடமு மாக்கி
சீரணிந்த கௌமாரச் சிந்து மாகி
செந்தமிழும் ஆரியமும் பாட லாகி
பேறணிந்த குளியாப்பிட்டி நகரின் மேவும்
ஸ்ரீ சுப்ர மண்யசுவாமி ஆடீர் ஊஞ்சல்

ஏரகத்தின் சுவாமிநாதா பழநி ஆண்டி
செந்தூரில் சூர்கடிந்த ஞான வேலா
பரங்குன்றில் குஞ்சரியின் அன்பு நாதா
திருத்தணிகை வள்ளிகாந்தா பழமுதிர் சோலை
திரனேமலைக் குன்றுடும் குமர வேலா
கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் நீயே
ஈரமுயர் குளியாப்பிட்டி நகர் அமர்ந்த
ஸ்ரீசுப்ர மண்யசுவாமி ஆடீர் ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் அருள்பொழிந்து அழகில் ஆட
ஆறிரு தடந்தோள்கள் அசைந்து ஆட
ஆறிரெண்டு கரங்களில் படைகள் ஆட
அறுமுன்று கண்களிலும் கருணை ஆட
நாறுமலர் கடம்பமாலை நலுங்கி ஆட
ஞானவேல் சோதிமய சுடராய் ஆட
ஏறுமிகும் குளியாப்பிட்டி நகர மர்ந்த
ஸ்ரீசுப்ர மண்யசுவாமி ஆடீர் ஊஞ்சல்

வள்ளல் உந்தன் திருவடியில் முத்தி யாட
வள்ளியுடன் குஞ்சரியும் அணைந்து ஆட
புள்ளிமயில் உனைச்சுமந்து நடனமாட
பொங்கரவம் அதன்காலில் தண்டையாட
துள்ளிஎழும் துவசமதில் சேவல் ஆட
தூயதமிழ் கொக்கரக்கோ என்றே பாட
விள்ளுமெழிற் குளியாப்பிட்டி வீற்றி ருக்கும்
ஸ்ரீசுப்ர மண்யசுவாமிஆடீர் ஊஞ்சல்

உள்ளமெனும் கோயிலிலே உன்னை இருத்தி
உப்பர்களும் மனிதர்களும் கூத்து மாட
கள்ளமிலா அடியவர்கள் கரங்குவித்து
அரகரா சண்முகா நாமம் பாட
ஒள்ளிநல் ஓம்முருகா நாத கீதம்
ஓங்காரம் பிரணவமாய் உலகம் பாட
துள்ளுமெழிற் குளியாப்பிட்டி நகர் அமர்ந்த
ஸ்ரீசுப்ர மணியசுவாமி ஆடீர் ஊஞ்சல்

வீரமருளும் உன்னுடல் கண்டு மிக்க
மகிழ்ச்சியிலே வையமெலாம் மகிழ்ந்து ஆட
அரனுட உமையாட அயனு மாட
அன்புடைய மாமனின் மாலு மாட
திரைமேவு கடலாட ஜெகதளயத ளாட
தெய்வீக வித்தைகளும் சேர்ந்தே ஆட
புரமான குளியாப்பிட்டி நகர மர்ந்த
ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி ஆடீர் ஊஞ்சல்

நம்பியவர் உள்ளமதில் ஓடிவரும்
நயகனே உனைப்போலும் தெய்வமுண்டோ
அம்பிகையின் திருக்குமரா ஆறுமுகனே
அடியார்குறை திர்த்திடவே இங்கெழுந்தாய்
தும்பிமுகன் தம்பியே தூய வேலா
துயர்களைந்து காத்திடுவாய் கார்த்திகேயா
அம்புவியில் குளியாப்பிட்டி நகர் அமர்ந்த
ஸ்ரீசுப்ர மண்யசுவாமி ஆடீர் ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணனே ஆறுமுகனே ஆடீர் ஊஞ்சல்
அம்மைதெய்வானையுடன் ஆடீர் ஊஞ்சல்
பூசணனே பூங்கவனே ஆடீர் ஊஞ்சல்
புனக்குறித்தி வள்ளியுடன் ஆடீர் ஊஞ்சல்
கர்ரணனே கலியுகனே ஆடீர் ஊஞ்சல்
கனிவுதரும் கந்தாநீர் ஆடீர் ஊஞ்சல்
சீரணிந்த குளியாப்பிட்டி நகர் அமர்ந்த
ஸ்ரீசுப்பிர மண்யசுவாமி ஆடீர் ஊஞ்சல்

அத்துவிதல கடந்தவனே வாழி வாழி
குஞ்சரியாள் வள்ளியுடன் வாழி வாழி
வித்தகத்தின் உத்தமனே வாழி வாழி
வெண்ணெய் யுண்டொன்மருகனே வாழி வாழி
சித்தமுடன் உனைவணங்கும் அடியார் வாழி
சிறப்புமிகும் குளியாப்பிட்டி நகரும் வாழி
பத்திதரும் அடியாநலம் நலமாய் வாழி
பாரெங்கும் மங்களமாய் வாழி வாழி

மங்களங்கள் கோடி என்று நிதம்பாடி வாழ்த்துகிறோம்
மன்னவன் முருகனுக்குப் பல்லாண்டு பாடுகிறோம்
திங்கள் மும்மாரி பெய்து வளம்பெறவே வாழ்த்துகிறோம்
தெய்வ அருள் சிறந்தோங்கி நலம்பெறவே
வாழ்த்துகிறோம்
அந்தனர்கள் அடியார்கள் கவினர்கள் வாழியவே
அறநிலையில் அரசோச்சி திகமுடனே வாழியவே
இந்த மண்ணில் மாந்தரெலாம் இனிதாக வாழியவே
எம்பெருமான் முருகனருள் என்றென்றும் வாழியவே.

WITH BEST COMPLIMENTS

FROM

Lanka Bharatha Stores

GENERAL MERCHANTS

15, Hettipola Road,

KULIYAPITIYA. T'Phone: 037 - 41302

- Groceries
- Ayurvedic Medicines
- Canned Foods
- Milk Foods Etc.

- බී. සී. සී. කුකුල් හා සත්ව ආහාර
- සීදුව තෙල් හා මේද සංස්ථාවේ කුකුල් හා සත්ව ආහාර
- සිමෙන්ති සංස්ථාවේ නිෂ්පාදන
- පොහොර
- ගොඩනැගිලි ද්‍රව්‍ය

ආදී මේ හැම සේවාවක්ම, අවශ්‍යතාවයක්ම
එක් වහලක් යටතේ ලබාගැනීමට
මෙන්න ස්ථානය.

සිරිලක් ට්‍රේඩර්ස්

14, සහ 16, හෙට්ටිපොල පාර,

කුලියාපිටිය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுரை

குளியாப்பிட்டி இந்து மகா சங்கம், ஸ்ரீ சிவ சுப்பிரமணிய ஆலய கும்பாபிஷேக விழா இனிது நிறைவுற உதவிய பின் வருவோருக்குத் தமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(1.) கும்பாபிஷேக பிரதிஸ்டா பிரதம குரு சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்களும், அவருக்கு உதவியாக இருந்த ஏனைய குருமணிகளுக்கும்.

(2.) ஆலய பிரதம குரு சிவஸ்ரீ R. பாலச்சந்திர சர்மா உதவி அர்ச்சகர் பிரம்மஸ்ரீ R. சோமஸ்கந்த சர்மா.

(3.) கும்பாபிஷேகத்திற்கு பெரும் பொருளுதவி செய்த திரு. காத்தமுத்து சேர்வை கமலேஸ்வரன்.

(4.) யாகங்களைத் தமது பொறுப்பில் ஏற்ற திரு. E. பாலசிங்கம் குடும்பம், திரு. பாலசூரியா குடும்பம், திரு. N. நாச்சியப்பன் குடும்பம், புரோக்கர் திரு. குலதிலகா குடும்பம், புரொக்டர் திரு. ஜயசேசரா குடும்பம், திரு. அனில் ஜயதிலகா குடும்பம், திரு. சுரேஸ் குடும்பம் ஆகியோர்.

(5) ஆலய கும்பாபிஷேக குருமணிகள் இருப்பிட வசதி செய்த திரு. I. A. M. புகாரி அவர்கள்.

(6.) கும்பாபிஷேக விழாவிற்கு நேரில் வந்து சிறப்புச் செய்த இந்து கலாச்சார அமைச்சர் திரு. தேவராஜ் அவர்கள்.

(7.) ஆலய சிற்ப நிர்மாணம் செய்த திரு. S. P. ராமசாமி ஆசாரி அவர்கள்.

(8.) மங்கள வாத்திய இசை செய்த நாதஸ்வர வித்துவான் திரு R. செல்வராசா குழுவினர்.

(9.) திருமுறைப் பாராயணமும், ஊஞ்சல் பாட்டு இயற்றிய பெ. சோமஸ்கந்தர், அதிபர் அவர்கள், உடப்பு.

(10) யாகசாலை, அமைத்து; மின்சார வசதி செய்த பிரம்மஸ்ரீ சந்திர சேகர் சர்மா அவர்கள்.

(11.) இந்து இளைஞர் மன்ற அங்கத்தவர்கள்

(12.) தம்மாலான பொருளுதவியை பெருமளவிலும் சிறு தொகையாகவும் அளித்த எல்லா முருகனடியவர்களுக்கும்.

(13.) சிலாபம், முன்னேஸ்வர தேவஸ்த்தானம் எமக்கு சகல வகையிலும் அளித்துள்ள பேருதவிகளுக்கும்.

(14) மேலும், மேற் குறிப்பிட்டவற்றைத் தவிர, எல்லாவிதத்தாலும் ஆலய கும்பாபிஷேகம் இனிது நிறைவுற உதவிய பெயர் குறிப்பிடாத எல்லா முருகனடியவர்களுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகப்
நூலக

மலர் நன்றியுரை

(1.) இக் கும்பாபிஷேக மலர் அடியவர்களின் கைகளில் தவள முன்னின்று உழைத்த தொகுப்பாசிரியர்கள் :-

❈ திரு. க. பாலசண்முகம். ❈ Dr. சிவா இரவீந்திரா ஆகியோருக்கும்.

(2) மலர் வெளியிட பொருளுதவியவர்கள் :-

❈ Dr. K. திருநாதன். ❈ Dr. K. ஜெயராசா.

❈ Dr. K. ராசசேகரன் ஆகியோர்.

(3.) கட்டுரைகள் வழங்கியோர்கள் :-

❈ ஆசிரியை, திருமதி விமலா புஸ்பநாதன் ❈ பா. சிவராம கிருஸ்ண சர்மா. ஆகியோர்.

(4.) மலரில் தங்கள் விளம்பரம் செய்த விளம்பரதாரர்கள்.

(5.) ஆசியுரை வழங்கிய பௌத்த, கிறீஸ்தவ முஸ்லீம் மத குருமார்கள்,

(6.) சிறப்புற பிரசுரித்த சாந்தி அச்சகம், (நீர்கொழும்பு.) உரிமையாளருக்கும். உதவியாளர்களுக்கும்.

மலருக்கு விளம்பரம் தந்து உதவிய விளம்பரதாரரை ஆதரிக்கும் வண்ணம் அன்பர்களேயும், வாடிக்கையாளர்களேயும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேம்.

கோவில் நிருவாக சபை தமது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අපෙන් සුබ පැතුම්!

ඉංග්‍රීසි බෙහෙත් වර්ග සහ සියලුම වර්ගයේ
සත්ව බෙහෙත් වර්ග

තොග සහ සිල්ලරට
ඉතාමත්ම සාධාරණවූ පහසු මිළකට
ලබාගැනීමට
එන්න:

ආසිරි ෆාමසි

21, හෙට්ටිපොල පාර,
කුලියාපිටිය.

(සහතික ලත් පුහුණු ඖෂධ වේදීන්ගේ සේවය මෙහිදී ලබාගත හැක.)

Dealers in

- PHARMACEUTICALS
- FOOD STUFFS
- GROCERIES
- VERTINARY MEDICINES
  & FOOD ADDITIVES

Wholesale & Retail

ASIRI PHARMACY

21, Hettipola Road,
KULIYAPITIYA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108.8

WITH BEST COMPLIMENTS

FROM

Mr. K. Shanmuganathan

PIRAMILA DESIGN CENTRE

(Gold Machine Cutting)

Gafoor Jewellers

103, MAIN STREET,

KULIYAPITIYA.

WITH BEST COMPLIMENTS

FROM

Eswara Trade Centre

17-19, Main Street, Kuliyapitiya.

Telephone : **41149**

Sivasakthi Stores

103-A, Main Street,

KULIYAPITIYA.

SANTHI - NEGOMBO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org